...தங்கள்: பத்து
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

...டர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 சித்திரை 19 திங்கட்கிழமை (01-05-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:133

# ...பளை நகரப் பகுதியை ...கைப்பற்றிவிட்டதாக ...புலிகள் தரப்பு அறிவிப்பு!

...ச்சந்தி முரளி



...ய அதிர்ஷ்டசாலிகள் ஆயுத ...கவர்கள்தான்...

## அரசு ஊர்ஜிதம் செய்யவில்லை

யாழ்ப்பாணம்,மே1

**பளை நகரப் பகுதியில் நேற்றுக்காலை முதல் மாலை வரை இடம்பெற்ற கடும் சண்டையைத் தொடர்ந்து அந்த நகரம் தம் வசமானதாக விடுதலைப் புலிகள் நேற்றிரவு அறிவித்துள்ளனர்.**

ஆனால் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பாலித பெர்னாண்டோ இதனை ஊர்ஜிதம் செய்ய மறுத்துள்ளார்.

அந்தப்பகுதியில் கடும் சண்டை இடம்பெறுவதாகத் தகவல் கிடைத்தது. ஆனால் அந்த நகர் புலிகளிடம் வீழ்ச்சி அடைந்ததாகத் தகவல் இல்லை. பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கலாம் என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

பளை நகரப் பகுதியில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் உக்கிரமான சண்டை இடம்பெற்றதாக களமுனைச் செய்திகள் தெரிவித்திருந்தன.

பளை நகரத்தில் நடந்த உக்கிரமான சண்டையை அடுத்து அந்த

(10ஆம் பக்கம் பார்க்க)

## ...ன்ரனோவ் விமானம் வீழ்ந்து நொருங்க ...ப்பாக்கிச் சூடு அல்லது ஏவுகணை காரணமாக இருந்திருக்கலாம்!

### உக்ரைன் நிபுணர்கள் தெரிவிப்பு

கொழும்பு,மே1

...நுராதபுரம், நளாவைப் பகுதியில் அன்ரனோவ் விமானம் வீழ்ந்து ...ங்கியதுக்கு துப்பாக்கிச் சூடு அல்லது ஏவுகணைத் தாக்குதல் ...ரணமாக இருக்கலாம் என்று உக்ரேனிய விமான நிபுணர்கள் தெரிவிக் ...றனர்.

இந்த விமானத்தின் கறுப்புப் பெட்டி தற்பொழுது உக்ரைனில் உள்ளது. ...வாங்க விசாரணைகளை நடத்திய இலங்கை அதிகாரிகள் மேலதிக ...சாரணைக்காக கறுப்புப் பெட்டியை உக்ரைனுக்கு அனுப்பி இருந்தனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டு நிறுவனங்கள் ...பணிகளை நிறுத்த முடிவு!

யாழ்ப்பாணம்,மே1

குடாநாட்டில் பெரிய அளவில் புனர்வாழ்வு, புனரமைப்புப்பணிகளில் ...டுபட்டுள்ள சர்வதேச தொண்டு நிறுவனங்கள் தமது பணிகளை ...றுத்த முடிவு செய்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.நா. அபிவிருத்தித் திட்டமும், ஜீரி.இஸட் எனப்படும் ஜேர்மன் ...தொழில்நுட்ப நிறுவனமும் குடாநாட்டில் பெரிய அளவில் அபிவிருத்தித் ...திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன.

(10ஆம் பக்கம் பார்க்க)

## சோபை இழந்த நிலையில் மேதினக் கொண்டாட்டம்

கொழும்பு மே 1

தற்போதைய யுத்த நிலைமை காரணமாக மேதினக் கொண்டாட்டங்கள் இன்று மிகவும் அடக்கமான முறையிலேயே நாடு முழுவதும் இடம்பெறுகின்றன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தொழிற்சங்கங்கள் பேரணியை நடத்தாமல் கூட்டத்தை மட்டும் கொழும்பு மாநகர சபை வளாகத்தில் நடத்தவுள்ளன.

ஐ.தே.கட்சியின் மேதினக் கூட்டமும், ஊர்வலமும் நுவரெலியா நகரில் இடம்பெறவுள்ளன.

மலையக மக்கள் முன்னணி தலவாக்கொல்லையில் மேதினக் கூட்டத்தை நடத்தும்.

இதேவேளை மட்டக்களப்பில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் மேதினப் பேரணிகள் நடத்துவதற்கு படைத்தரப்பு அனுமதி மறுத்துள்ளது. இராணுவக்கட்டுப்பாடற்ற மட்டக்களப்புப்பகுதியில் மேதினத்தை முன்னிட்டு விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அதே சமயம் யாழ்.குடாநாட்டில் யாழ்.மாவட்ட தொழிற்சங்கங்களில் ஒன்றிணைந்து இன்று காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் மாபெரும் கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளன.

ஈ.பி.டி.பி ஒழுங்கு செய்துள்ள பேரணி வேலணையில் நடைபெறும். ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் வரதராஜப்பெருமாள் அணியினரின் கூட்டம் மட்டக்களப்பில் நடைபெறும். புளொட் அமைப்பின் கூட்டம் குருநகரில் இடம்பெறும்.

மேதினத்தை முன்னிட்டு இன்று நாட்டின் சகல பகுதிகளிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கும் என அரசதரப்பு நேற்று அறிவித்தது.

## மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நேற்று தொலைபேசிச் சேவை

யாழ்ப்பாணம்,மே1

குடாநாட்டுக்கு மன்னார் ஊடான மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான தொலைபேசிச் சேவை ஓரளவே நேற்று இடம்பெற்றது.

மன்னாரில் உள்ள தொலைத் தொடர்புக் கோபுரத்துக்கும் பண்ணையில் உள்ள தொலைத்தொடர்புக் கோபுரத்துக்கும் இடையில் இணைப்பைப் பெறுவதற்கான கருவிகளைப் பொருத்தும் பணி நேற்றுக் காலை முதல் மாலை வரை இடம்பெற்றது.

மாலையில் இருந்து ஓரளவு சேவை இடம்பெற்றது. (இ-3)

## கார்ச் சாரதி உட்பட நால்வர் நேற்று ஏழாலையில் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி!

யாழ்ப்பாணம்,மே1

ஏழாலைப் பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் நால்வர் உயிரிழந்தனர். இவர்களது சடலங்கள் நேற்றுப் பிற்பகல் 3.00 மணியளவில் சுன்னாகம் பொலீஸாரால் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

காரில் சென்றுகொண்டிருந்த நால்வரையும் படையினர் வழி மறித்ததாகவும் காரை ஓரமாக நிறுத்த முற்பட்ட வேளையில் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சங்கானை வடக்கைச் சேர்ந்த கார்ச் சாரதியான இராசரட்ணம் யோகலிங்கம் (வயது 56) உட்பட நால்வரும் அதே இடத்தில் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

நான்கு சடலங்களிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன. உயிரிழந்தவர்களின் மற்றைய மூவரின் விவரம் எதுவும் தெரியவரவில்லை.

நேற்றுக்காலை ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள கார் வாடகைத் தரிப்பிடத்துக்கு வந்த ஒருவர் - துரையப்பா விளையாட்டரங்குக்கு அண்மையில் ஒருவர் சுகவீனமுற்றிருப்பதாகவும் அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரவேண்டும் என்றும் கூறி பிரஸ்தாப காரை அழைத்துச்சென்றதாக ஏனைய கார்ச் சாரதிகளால் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தின்போது பலத்த சேதத்துக்குள்ளான கார் தற்போது சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் இருப்பதாகக் கூறப்பட்டது. (இ-8-9)

## இலங்கையின் தாக்குதல்கள் தொடர அனுமதிக்கக் கூடாது

### கோபாலசாமி கூறுகிறார்

சென்னை,மே1

தமிழக மீனவர் மீது இலங்கைக் கடற்படை தொடர்ந்து நடத்தி வரும் தாக்குதல் இனியும் தொடர அனுமதிக்கக் கூடாது என்று ம.தி.மு.க. பொதுச் செயலர் வை கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகளை அப்பட்டமாக மீறுகின்ற இலங்கை அரசின் தாக்குதலை தான் வன்மையாகக் கண்டிப்பதாக நேற்று சென்னையில் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் கோபாலசாமி தெரிவித்திருக்கிறார்.

(3ஆம் பக்கமும் பார்க்க)

## படையினருக்கு இரத்தம் வழங்க கோரிக்கை

கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட இராணுவ வீரர்கள் சிலருக்கு ...டனடியாக இரத்தம் தேவைப்படுவதாக இராணுவ ஊடகப் பிரிவு நேற்று முன்னிரவு அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்தது.

அவசர சத்திர சிகிச்சை ஒன்றுக்காக 'ஓ' நெகட்டிவ் இரத்தமே தேவைப்படுவதாகவும் -

இந்த இரத்தம் ஆறு மணித்தியாலங்களுக்குள் தேவைப்படுவதாகவும் அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இரத்ததானம் செய்ய விரும்புவோர் கொழும்பு தேசிய ஆஸ்பத்திரிக்கு உடனடியாக வரும்படி இராணுவ ஊடகப் பிரிவு வேண்டுகோள் விடுத்தது. (இ-8)

## படையினருக்கு மிக நவீன ஆயுதங்களை கொள்வனவு செய்வதில் அரசு தீவிரம்

### உலக நாடுகளின் ஆயுதத் தரகர்கள் கொழும்புக்கு அழைப்பு

கொழும்பு,மே1

ஆனையிறவுப் படைத்தள வீழ்ச்சியை அடுத்து ஏற்பட்டுள்ள நிலைமையைச் சீராக்கும் நோக்குடன் படையினருக்கு நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் அதிரடி நடவடிக்கை ஒன்றில் பாதுகாப்பு அமைச்சு ஈடுபட்டுள்ளதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த டிசெம்பர் மாதம் நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பாக கேள்விப்பத்திரங்களை அரசு கோரியிருந்தது.

ஆயுத விற்பனை செய்யும் நிறுவனங்களைப் பதிவு செய்யும்படி பாதுகாப்பு அமைச்சு அந்த கேள்விப்பத்திரத்தில் கோரியிருந்தது.

எனினும் அது தொடர்பான நடவடிக்கைகள் எதனையும் அரசு பின்னர் எடுக்கவில்லை.

ஆனால் தற்பொழுது ஆனையிறவுத்தளத்தின் தோல்வியை அடுத்து படைகளுக்கு நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய பாதுகாப்பு அமைச்சு அதிரடி நடவடிக்கையை எடுத்துள்ளது.

இந்த நடவடிக்கையின் பயனாக ரஷ்யா, பிரிட்டன், பாகிஸ்தான், ஈரான், செக்குடியரசு, இஸ்ரேல், சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இருந்து கொழும்புக்கு ஆயுத தரகர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சந்திரானந்த டி.சில்வா தலைமையான குழு பேச்சுக்களை நடத்தி வருகின்றது. விடுதலைப் புலிகள் வசம் உள்ள றொக்கட் பீரங்கிகள் போன்ற சில நவீன ஆயுதங்கள் படையினரிடம் இல்லை என்று இராணுவத் தளபதி கூறியதை அடுத்தே இந்த ஆயுதக் கொள்வனவு முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாக செய்தி ஏஜென்சி ஒன்று தெரிவித்துள்ளது.

லேஸர் ஒளியால் வழிநடத்தப்படும் ஏவுகணைகள் மற்றும் மேலதிக போர் விமானங்களைப் பெற்றுத் தருமாறு விமானப்படையும் -

பீரங்கிகள் மற்றும் மின்னனு போர்க் கருவிகளைப் பெற்றுத் தருமாறு இராணுவமும் -

(10ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பொதுமக்களைத் தாக்கிய படை அதிகாரி இடமாற்றம்

மட்டக்களப்பு,மே1

ஆனையிறவு முகாம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டமை தொடர்பான வெற்றிச் சுவரொட்டிகள் கிரான்குளத்தில் காணப்பட்டதை அடுத்துப் பொதுமக்கள் தாக்கப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாக அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரிக்கு இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு குருக்கள் மடம் விஷேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி இந்திரஜித் என்பவரே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வெற்றிச் சுவரொட்டிகள் காணப்பட்டதை அடுத்து அதிரடிப்படையினரின் தாக்குதலுக்கு இலக்கான சுமார் 30 பேர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-க-3)

## தராசுகளுக்கு முத்திரை

யாழ்ப்பாணம்,மே1

உடுப்பிட்டி பிரதேச சபை உப அலுவலகத்தில் நாளை செவ்வாய்க்கிழமையும் எதிர்வரும் வியாழக்கிழமையும் காலை 9 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரை நிறுத்தல் அளவைகள் உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணி நடைபெறும். (க-30)


MATHS CENTER
NELLIYADI

பிரிவு II (வழமையான ஆசிரியர் குழு)
A/L 2002, கலை, வர்த்தகம்

ஆரம்பம்: 01-05-2000
7.30 a.m

(C/12003)


# போர் முனையில் கடமையாற்றாதோர் அமெரிக்காவில் பயிற்சி பெறத் தெரிவு

## பலர் ஜனாதிபதி, பிரதமரின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தோராம்

கொழும்பு,மே.1

குண்டுகளைச் செயலிழக்க வைப்பது மற்றும் குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் ஆகியவை தொடர்பான பயிற்சிகளைப் பெறுவதற்காக அண்மையில் பொலீஸ் திணைக்களத்தினால் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்ட பொலீஸ் அதிகாரிகளில் பலர் முக்கிய அரசியல்வாதிகளின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் அடிப்படைத் தகைமைகள் இல்லாத உத்தியோகத்தர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தப்பயிற்சிக்காக உத்தியோகத்தர்களை அனுப்பும்போது வயதடைந்த மற்றும் மனித உரிமை மீறல் சம்பவங்களில் ஈடுபட்ட அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட உத்தியோகத்தர்களை அனுப்பக்கூடாது என அமெரிக்க அரசு நிபந்தனை விதித்திருந்தது. எனினும் பயிற்சிக்கு அனுப்பப்பட்டோரில் இப்படியானவர்களும் இடம்பெற்றிருந்தனர் என்று கூறப்படுகிறது.

இவ்வாறு அனுப்பிவைக்கப்பட்டவர்களில் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவு, பிரதமரின் பாதுகாப்புப் பிரிவு மற்றும் பொலீஸ் உயர் அதிகாரிகளின் தனிப்பட்ட உதவியாளர்கள் ஆகியோர் அடங்கியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

கடந்த மாதம் 14 ஆம் திகதி அமெரிக்காவிலுள்ள லூசியானா பொலீஸ் அக்கடமியில் பயிற்சி பெற இவர்கள் அனுப்பப்பட்டுள்ளனர். இவர்களில் 7 சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர்கள், 2 பொலீஸ் அத்தியட்சகர்கள், 10 உதவிப் பொலீஸ் அத்தியட்சகர்கள் மற்றும் 6 பொலீஸ் இன்ஸ்பெக்டர்கள் அடங்கி உள்ளனர்.

இவ்வாறு அனுப்பப்பட்ட உத்தியோகத்தர்களில் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர்கள் இருவர் இம்மாதம் 60 வயதையடைந்து ஓய்வு பெறவுள்ளனர். ஒரு பொலீஸ் அத்தியட்சகருக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனித உரிமைகளை மீறியதாக குற்றஞ்சாட்டி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இன்ஸ்பெக்டர் ஒருவருக்கு எதிராக மனித உரிமை மீறல் வழக்கு ஒன்றில் 60 ஆயிரம் ரூபா நட்டஈடு செலுத்தும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கண்ணிவெடித் தாக்குதல்கள், தற்கொலைக் குண்டுதாரிகளின் தாக்குதல்கள் இடம்பெறும் வடக்கு - கிழக்கு போர்முனைகளிலும் கொழும்பு நகரிலும் கடமையாற்றும் பொலீஸ் அதிகாரிகளும் குண்டு வெடிப்புக்கள் தொடர்பான விசாரணைகளில் நிரந்தரமாக ஈடுபட்டுள்ள பொலீஸ் அதிகாரிகளுமே இந்தப் பயிற்சியைப் பெறத் தகுதியுடையவர்களாவர்.

கடந்த மாதம் அமெரிக்காவுக்கு அனுப்பிவைக்கப்பட்ட 35 உத்தியோகத்தர்களில் வடக்கு - கிழக்கு போர்முனைகளில் பணியாற்றும் ஒருவர் கூட இடம்பெறவில்லை. (இ)

## வீடியோ படக் காட்சி

யாழ்ப்பாணம்,மே1

யாழ். பல்கலைக்கழக புவியியல் கழகத்தின் ஏற்பாட்டில் புவியியற் துறையில் பிரதி செவ்வாய் தோறும் பிற்பகல் 3 மணி முதல் 4 மணி வரை கல்விசார் வீடியோப் படக் காட்சிகள் காண்பிக்கப்பட்டு வருகின்றன.

நாளை செவ்வாய்க்கிழமை 'தாவரங்களின் பிரத்தியேக வாழ்வு' எனும் படம் காண்பிக்கப்படவுள்ளது. (க-10)

## 'யுனெஸ்கோ' கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,மே1

'யுனெஸ்கோ' அமைப்பின் நிகழ்ச்சித் திட்டங்களில் கடந்த பெப்ரவரி மாதம் பணியாற்றிய வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பணி-இணைப்பாளர்கள், ஆங்கில ஆசிரியர்கள் ஆகியோருக்கான கொடுப்பனவுகளை நாளை மறுதினம் புதன்கிழமை 'யுனெஸ்கோ' பணி இணைப்பாளர்களிடம் பெற்றுக் கொள்ளுமாறு இந்த அமைப்பின் யாழ். மாவட்ட இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

மாவட்ட மட்ட 'யுனெஸ்கோ' இலக்கியப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான கொடுப்பனவு பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் என்று அவர் - மேலும் தெரிவித்தார். (க-10)

# இடம்பெயர்ந்த இடங்களில் கல்வியைத் தொடர வசதி

யாழ்ப்பாணம்,மே1

தற்போதைய யுத்த சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்துள்ள மாணவர்கள் தாங்கள் வசிக்கும் பகுதியிலுள்ள தெரிவு பாடசாலைகள் தவிர்ந்த வேறு பாடசாலைகளில் தமது கல்வியைத் தொடர முடியுமென ஐந்து கல்வி வலயங்களினதும் கல்விப் பணிப்பாளர்களும் அறிவித்துள்ளனர் என்று இ.த.ஆ. சங்கத்தில் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் தபஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார்.

எனினும் இவர்கள் தமது இலவச சீருடைத் துணிகளையும் இலவசப் பாடப் புத்தகங்களையும் நிரந்தரப் பாடசாலைகளிலேயே பெற்றுக் கொள்ள வேண்டுமெனவும் -

இவற்றினைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்கள் கோட்டக்கல்வி அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வரவேண்டும் எனவும் - அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5-9)

## விபத்தில் பெண் காயம்

யாழ்ப்பாணம்,மே1

மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்குண்டு பாதசாரியான இளம் பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணம் நல்லூர் வைமன் வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த செல்லையா பரமேஸ்வரி (வயது 36) என்ற இளம் பெண்ணே படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)


# 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 26 - 06 - 1920



ஆண்டவன் அடியில் 11 - 05 - 1980

## திருமதி வேலும்மயிலும் இரத்தினம்

ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்தி கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி!

சீனியர் லேன்,
கலட்டி.

(75892)

குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

உதிப்பு 14 - 11 - 1961



உதிர்வு 01 - 04 - 2000

## சங்கரப்பிள்ளை பாலசிங்கம் (பாலன்)

விவசாய மன்னனின் வித்தாகி
விவசாய மக்களின் சொத்தாகி
விண்ணகத்தை விளைநிலமாக்கச் சென்றீரோ?
விழுகின்ற கண்ணீரைத் துடைப்பதற்கு
விரைந்திங்கு வாருமையா!

கைதடி கிழக்கு.
கைதடி.

மனைவி, பிள்ளைகள்,
தாய், மாமா, மாமி,
சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிகள்,
உற்றார், உறவினர்கள்.

(11990)

ராஜா
யாழ்ப்பாணம்
அஜித், ஷாலினி
நடிப்பில்
அமர்க்களம்
காட்சிகள்
10.30, 2.30.
(C/11604)

நாகம்ஸ்
சுன்னாகம்
விஜய், ஷாலினி,
ரகுவரன்
நடித்த
கண்ணுக்குள் நிலவு
(ரீஸ்ஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
(75883)

லிபேட்டி
அச்சுவேலி
கார்த்திக், ரோஜா,
கௌசல்யா
நடிப்பில்
சந்தித்த வேளை
(புதிய வெளியீடு)
காட்சிகள் :10.30, 2.30
T.P- 070-212223
- 070-212678
FAX No. 0094 - 70212223
(75816)

# நன்றி நவிலலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

19-04-2000 அன்று நல்லூரான் திருவடியைச் சேர்ந்த எமது குடும்பத்தலைவர்

## பிரம்மஸ்ரீ சுந்தரராஜ சர்மா பசுபதீஸ்வர சர்மா (ராஜன்)

அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டும், அனுதாபச் செய்திகள் வழங்கியும், பல்வேறு உதவிகள் புரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (02-05-2000) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

179, பருத்தித்துறை வீதி,
நல்லூர் கோயில் முன்பாக,
யாழ்ப்பாணம்.

(75905)

திருமதி ப. சகுந்தலாதேவி
ப. கணேசராஜன் (மகன்)
ப. விக்னராஜன் (மகன்)
த. சற்குணானந்தசர்மா
(மருமகன் -- இவிரு)

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை சுகந்தமலர்

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் மடத்தடி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சுகந்தமலர் நேற்று (30-04-2000) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகளும், கந்தசாமி (தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்) தவமலர், காலஞ்சென்ற பேரின்பநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சர்வேஸ்வரியின் மைத்துனியும், வித்தியா, நர்த்தனன், ஸ்ரீபிரியா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-05-2000) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி ஒழுங்கை,
மானிப்பாய்.

(C/12015)

தகவல்:
சி.கந்தசாமி
(சகோதரன்)

# இலங்கைக் கடற்படை சூடு!

# மூன்று தமிழக மீனவர் பலி!!

## நாகபட்டினம் அருகே சம்பவம்

சென்னை, மே 1

தமிழகக் கடற்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் மீது நேற்று முன்தினம் இலங்கைக் கடற்படையினர் சண்மூடித் தனமாகத் தாக்குதல்களை நடத்தியதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. இந்தத் தாக்குதலில் மூன்று மீனவர்கள் உயிரிழந்தனர்; மற்றுமொருவர் காயமடைந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தமிழகம் நாகபட்டினத்தைச் சேர்ந்த குமார், முனுசாமி, அஞ்சப்பன் ஆகியோரே உயிரிழந்த மூன்று மீனவர்களாவர்.

பலியானவர்கள் உட்பட ஆறு பேர் இந்தியக் கடற்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் அவர்கள் மீது தாறுமாறாகச் சுட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடையாமல் உயிர் தப்பிய இரு மீனவர்கள் படகைக் கரை சேர்த்தனர். (ஐ-6-ஒ)

## ஈராக்கில் அருங்காட்சியகம் மீண்டும் திறப்பு

பாக்தாத், மே 1

மத்திய கிழக்கில் முக்கிய சுற்றுலா மையமாக விளங்கும் ஈராக் அரும்பொருள் காட்சியகம் 10 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் பொதுமக்களின் பார்வைக்காகத் திறக்கப்பட்டுள்ளது.

1960 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தக் காட்சியகம் 1991 ஆம் ஆண்டு ஈராக் குவைத்தை ஆக்கிரமித்ததைத் தொடர்ந்து அமெரிக்கா ஈராக்மீது நடத்திய தாக்குதலில் சேதமடைந்திருந்தது. (ஐ - 6 - ஒ)

## விண்ணில் அதிசயம்

# ஐந்து கோள்கள் ஒரே வரிசையில்!

புதுடில்லி, மே 1

விண்ணில் உள்ள ஐந்து கோள்கள் ஒரே வரிசையில் காட்சி கொடுக்கும் அதிசய நிகழ்வு இந்த வாரம் இடம்பெற இருப்பதாக விண்ணியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனிஆகிய ஐந்து கோள்களுமே மே 3 ஆம் திகதி முதல் 5ஆம் திகதி வரை ஒரே கோட்டில் வரவுள்ளன. இவற்றைத் தொலைநோக்கி எதுவுமின்றி வெறும் கண்களாலேயே பூமியிலிருந்து காண முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவை சூரியனுக்கு அருகில் வரிசையாகக் காணப்படும் என்றும் —

38 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த அரிய நிகழ்வு இடம்பெறுவதாகவும் —

நிபுணர்கள் மேலும் கூறியுள்ளனர்.

இதே வேளை —

வரிசையாகத் தெரியும் கோள்களைப் பார்க்கும் ஆவலால் சூரியனின் கதிர்களினால் கண்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து அவதானமாக இருக்கும்படியும் பொதுமக்களை விண்ணியலாளர்கள் எச்சரித்துள்ளனர். (ஐ-ஒ)

# மீனவரைத் தாக்குவதை தமிழகம் பொறுக்காது!

## கருணாநிதி கண்டனம்

சென்னை, மே 1

'அப்பாவித் தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் அநியாயமாகச் சுட்டுக் கொல்வதை தமிழக அரசு இனியும் பொறுத்துக் கொள்ளாது' என்று தமிழக முதல்வர் மு கருணாநிதி எச்சரித்துள்ளார்.

நாகபட்டினத்தைச் சேர்ந்த 3 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து முதல்வர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படையினரின் இந்தப்படுகொலைகளைத் தடுத்து நிறுத்த மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கேட்டிருக்கிறார்.

பலியான மீனவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாவும், காயமடைந்தவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாவும் வழங்கவும் தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார். (ஐ-ஒ)

## அதிக குழந்தை பெறும் சிங்கப்பூர் பெண்கள்

சிங்கப்பூர் சிற்றி, மே 1

சிங்கப்பூர் பெண்கள் முடிந்த மட்டும் அதிக குழந்தைகளைப் பெறவேண்டும் என்ற அரசின் வேண்டுகோளுக்கு கல்வியறிவுள்ள பெண்கள் அதிகம் ஒத்துழைப்பதாக சிங்கப்பூர் வானொலி தெரிவித்துள்ளது.

சிங்கப்பூரில் மக்கள் தொகை குறைவாக இருப்பதால் வெளிநாட்டினரின் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலையைத் தடுக்கவே அதிக குழந்தைகளைப் பெறும்படி சிங்கப்பூர் அரசு பெண்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தது. (ஐ-ஒ)

## இந்தியா வாங்கும் கடன் 20வீதம் அதிகரிப்பு

புதுடில்லி, மே 1

இந்தியா இந்த வருடம் வாங்கும் கடனின் தொகை 20 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனால் கடன் தொகை ஒரு லட்சத்து 17 ஆயிரம் கோடி ரூபா ஆகும். இந்தத் தொகைக்கான வட்டி நாட்டின் பாதுகாப்புச் செலவினத்தைவிட இருமடங்கு ஆகும் என்று கணிக்கப்பட்டுள்ளது. (ஐ-ஒ)

## ஷெரீப்மீதானவழக்குகளைகண்காணிக்க பொதுநலவாய நாடுகள் குழு பாகிஸ்தான் செல்ல வேண்டும்

## அவரது மகன் கோரிக்கை

லண்டன், மே 1

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ்ஷெரீப் மீதான ஊழல் வழக்குகள் நியாயமான முறையில் நடைபெறுகின்றனவா என்பதைக் கண்காணிக்க பொதுநலவாய அமைப்பு ஒரு குழுவை பாகிஸ்தானுக்கு அனுப்பி வைக்க வேண்டும்என்றுநவாஸ்ஷெரீப்பின் மகன் ஹசன் ஷெரீப் கோரி உள்ளார்.

லண்டனில் தங்கி இருந்து கல்வி கற்று வரும் ஹசன் ஷெரீப் அங்கு பொதுநலவாய அமைப்பின் தலைமைச் செயலரை நேரில் சந்தித்து இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

விமானக் கடத்தல், தேசத்துரோகம் மற்றும் ஆள் கடத்தல் ஆகிய குற்றச்சாட்டுக்களுக்காக நவாஸ் ஷெரீப்புக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் ஷெரீப் மீது பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர்கள் பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுக்களைப் பதிவு செய்துள்ளனர். அவைமீதான விசாரணைகள் இப்பொழுது இடம்பெற்று வருகின்றன.

## திருச்சி விமான நிலைய பாதுகாப்பு அதிகரிப்பு!

சென்னை, மே 1

கொழும்பு சர்வதேச விமான நிலையத்திலிருந்து பயணிகள் விமானத்தைக் கடத்துவதற்கு விடுதலைப் புலிகள் திட்டமிட்டிருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து திருச்சி விமான நிலையத்தின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருச்சி விமான நிலையத்தில் விமானக்கடத்தல் தடுப்புக் காவற் படையினர் விசேட பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

விமானக் கடத்தலை முறியடிக்கும் வகையில் தீவிர கண்காணிப்பு நடவடிக்கையிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். (ஐ-6-5)

# வெளிமாவட்டங்கள் செல்ல பயண அனுமதி வழங்கப்பட்டோர்

யாழ்ப்பாணம், மே 1

யாழ். குடாநாட்டில்இருந்து வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 29 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு

### சங்கானை

(141867 ஏ).

### சாவகச்சேரி

(137388 ஏ), (137388 பி), (137455 ஏ), (137455 பி), (137455 சி), (138631 ஏ), (138631 பி), (138631 சி), (138631 டி), (138631 ஈ), (138631எவ்), (138635 ஏ), (138635 பி), (138647 ஏ), (138647 பி), (138652 ஏ), (138652 பி), (138653 ஏ), )138653 பி), (138654 ஏ), (138654 பி), (138654 சி), (138654 டி), (138654 ஈ), (138654 எவ்), (138660ஏ), (138660 பி), (138660 சி), (138660 டி), (138660 ஈ), (138662 ஏ), (138662 பி), (138663 ஏ), (138663 பி), (138663 சி), (138663 டி), (138665ஏ)

(138665 பி), (138665 சி), (138665 டி), (138666ஏ), (138674 ஏ), (139366 ஏ), (139366 பி), (139366 சி), (139366 டி), (139367 ஏ), (139367 பி), (139367 சி), (139367 டி), (141524 ஏ), (141524 பி), (141524 சி), (141524 டி), (141524 ஈ), [141540 ஏ], [141547 ஏ], [141547 பி], [141547 சி] [141566 ஏ], [141566 பி], [141588 ஏ], [141608ஏ], [141608 பி], [141608 சி], [141618ஏ], [141618 பி], [141618 சி], [141618 டி), (141618 ஈ), (141624 ஏ), (141627 ஏ), (141628 ஏ), (141628 பி), (141629 ஏ), (146502 ஏ), (146512 ஏ), (146513 ஏ), (146513 பி). (146518 ஏ), (146518 பி), (146518 சி), (146519 ஏ), (146519 பி), (146519 சி), (146520ஏ), (146520 பி), (146520 சி), (146520 டி), (146520 ஈ), (146523 ஏ), (146523 பி), (146523 சி). (146523 டி), (146524 ஏ), (146524 பி), (146525 ஏ), (146526 ஏ), (146526 பி), (146527ஏ), (146528ஏ), (146530ஏ), (146532ஏ),

(146554ஏ), (146554பி), (146555ஏ), (146557ஏ). (146557பி), (146581ஏ), (146581பி), (146580சி), (146585ஏ), (146585பி), (146597ஏ), (146597பி), (146636ஏ), 146636பி), (146640ஏ), (146643ஏ), (146647ஏ), (146647பி). (146648ஏ), (146648பி), (146648சி), (130549ஏ), (130549பி), (131392ஏ), (131392பி) (131485ஏ), (131485பி), (131487ஏ), (131487பி), (131487சி), (131487டி), (131522ஏ), (131522பி). (131527ஏ), (131527பி), (134927ஏ), (134927பி), (134927சி), (134927டி), (135451ஏ). (135451பி), (135461ஏ), (135461பி), (139188ஏ), (139188பி), (139188சி), (139188டி), (139188ஈ), (141631ஏ), (141635ஏ), (141635பி), (141649ஏ), (141650ஏ), (141650பி), (141951ஏ), (141651பி), (141657ஏ), (141657பி), (141660ஏ), (141667ஏ), (141667பி), (143487ஏ), (143487பி). (143488ஏ), (143499ஏ),

### யாழ்ப்பாணம்

(132118ஏ), (132118பி), (132118சி), (139020ஏ), (139020பி), (139020சி), (139020டி), (140446ஏ), (140691ஏ), (140691பி), (142030ஏ), (142703ஏ), (142826ஏ), (142852ஏ), (142861ஏ), (142885ஏ), (142885பி), (142885சி), (142924ஏ), (142924பி), (142929ஏ), (142929பி), (142932ஏ), (142932பி), (142932சி), (142941ஏ), (142944ஏ), (142948ஏ), (142948பி), (142948சி), (142956ஏ), (142956பி), (142964ஏ), (142964பி), (142972ஏ), (142972பி), (141972சி), (142973ஏ), (142973பி), (142982ஏ), (143000ஏ), (143003ஏ), (143003பி), (143016ஏ), (143030ஏ), (143030பி), (143030சி), (143032ஏ), (143038ஏ), (143042ஏ), (143044ஏ), (143044பி), (143049ஏ), (143059ஏ), (143064ஏ), (143064பி), (143079ஏ), (143112ஏ), (143116ஏ), (143176ஏ), (143177ஏ), (143179ஏ), (143180ஏ), (187731ஏ), (147747ஏ).

### கோப்பாய்

(143026ஏ).

### நல்லூர்

(141321ஏ), (141727ஏ), (141727பி), (141838), [141838பி], [141838சி], [141839ஏ], [141839பி], [142154ஏ], [142154பி], [142154சி],

### சண்டிலிப்பாய்

[141364ஏ], [141889ஏ], [141889பி], [141944ஏ], [141944பி], [142130ஏ], [142130பி].

### தெல்லிப்பழை

[141367ஏ], [141367பி], [141367சி], [141699ஏ], [141948 ஏ].

### உடுவில்

[135917ஏ], [135917பி], [139743ஏ], [139743பி], [141357ஏ], [141357பி], [141860ஏ], [141860பி], [141860சி], [141860டி], [141932ஏ], [141932பி], [141932சி], [141932டி], [141936ஏ], [141954ஏ], [141955ஏ], [142021ஏ], [142097ஏ], [142132ஏ], [142132பி], (க)

## கடந்த ஆறு ஆண்டுகளில்
# 2 லட்சத்து 34 ஆயிரம் பேர் மலேரியாவினால் பீடிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், மே 1

யாழ். குடாநாட்டில் கடந்த ஆறு ஆண்டுகளில் [ 1994 — 1999] 2 லட்சத்து 34 ஆயிரத்து 301 பேர் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டனர் என்று மலேரியா தடுப்பு இயக்கத்தின் [யாழ். மாவட்டம்] பொறுப்பதிகாரி டாக்டர் கே. ரி. சிவபாதம் தெரிவித்தார்.

மலேரியா நோயின் தாக்கம் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக எமது செய்தியாளரின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவர் மேலும் கூறியதாவது:–

கடந்த ஆறு ஆண்டுகளில் 1998 ஆம் ஆண்டில் மட்டும் 47 ஆயிரத்து 802 பேர் மலேரியாவினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இது ஏனைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது மிகக் கூடுதலான எண்ணிக்கையாகும்.

சாதாரண காய்ச்சலுக்காக சிகிச்சை பெற வந்தவர்களின் இரத்தத்தினைப் பரிசோதனை செய்ததன் மூலம் அவர்கள் மலேரியாவினால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது. தற்பொழுது மக்கள் மலேரியாவுக்கு உரிய சிகிச்சைகளை முழுமையாகப் பெற்று வருவதனால் இந்நோயின் தாக்கம் குறைந்து வருகிறது.

சாவகச்சேரி, பருத்தித்துறைப் பகுதிகளிலே இந்நோயின் தாக்கம் கூடுதலாக காணப்பட்டது. மலத்தியோன் விசிறல், நுளம்புக் குடம்பிகளை அழித்தல் மற்றும் நுளம்பு வலைகள் பாவித்தல் போன்ற காரணங்களினால் மலேரியா படிப்படியாகக் குறைந்து வருகிறது.

கடந்த ஜனவரிக்குப் பின்னர் மார்ச் மாதம் வரையான மூன்று மாத காலத்தில் 3 ஆயிரத்து874பேர்மலேரியாக் காய்ச்சலுக்காக குடாநாடு முழுவதும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

அடுத்த மூன்று காலாண்டுப் பகுதிகளில் மலேரியாக் காய்ச்சலின் பாதிப்பு குறைவடையலாம்.

இப்படி அவர் மேலும் கூறினார்.

(ஐ-5-10)


## நன்றியுடன் வாழ்த்துகின்றோம்

தோன்றாத் துணையாக நின்று எமது வித்தியாசாலைக்கு வளம் சேர்த்துதவிய நற்சேவையாளர்

**திரு. ந. திரிலோகநாதன்**

(தலைவர், பிரதேசசபை, வலிகாமம் மேற்கு அமைப்பாளர், ஈ.பி.டி.பி அமைப்பு, வட்டுக்கோட்டைத் தொகுதி)

அவர்களை நன்றியுடன் வாழ்த்துகின்றோம்.

வரதராஜப்பெருமாள் வித்தியாசாலைச் சமூகம்.

பொன்னாலை. (75899)


## 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



திருமதி

**சுப்பிரமணியம் ஆச்சாரி பசுபதிஅம்மா**

தோற்றம்: 17 - 02 - 1925 மறைவு: 16 - 04 - 2000

திதி: பூர்வபட்ச திரியோதசி

எங்கள் குடும்பத் தலைவி மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்த எங்கள் துக்கத்தில் பங்கு கொண்டு அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் மற்றும் இறுதிக் கிரியைகளில் ஒத்தாசை புரிந்த அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளம் நெகிழ்ந்தநன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (2000 - 05 - 01) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— குடும்பத்தினர்

சு. சரவணபவன் ஆச்சாரியார்,
34. பிறவுண் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம். (75900)

## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, மே 1

உரும்பிராய் கிழக்கு திருக்கரந்தன் பதி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் சமேத சிவபூத நாதேஸ்வர சுவாமி ஆலயத் தேர்த் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கும் தீர்த்தத் திருவிழா மறுநாள் காலை 9.30 மணிக்கும் இடம்பெறும். (க-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 1

வண்ணை வட மேற்கு ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி மூர்த்தி ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 9.15 மணிமுதல் 10.30 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறும். (க-8)

★ ★ ★

கொழும்புத்துறை, மே 1

கட்டுவன் கரண்டைக்குளம் சபரிகிரி ஸ்ரீ ஐயப்ப சுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம் கடந்த 20 ஆம் திகதி நடைபெற்றது. தொடர்ந்து மண்டலாபிஷேகம் இடம்பெற்று வருகின்றது. (க—30)

★ ★ ★

கொழும்புத்துறை, மே 1

ஆனைக்கோட்டை ஸ்ரீகரைப்பிரான் ஆதிவிநாயகர் ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 9 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (க—30)

★ ★ ★

நல்லூர், மே 1

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ நீலாயதாக்ஷ்சமேத ஸ்ரீகாயாரோஹணசுவாமிகள் ஆலயத்தேர்த்திருவிழாநாளை மறுதினம் புதன்கிழமை காலை 10 மணிக்கும் தீர்த்தத்திருவிழா மறுநாள் காலை 8 மணிக்கும் நடைபெறவுள்ளன. (க—103)

★ ★ ★

சுதுமலை, மே 1

சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 18 நாள்கள் நடைபெறும்.

எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

திருவிழாக்காலங்களில் தினமும் இரவு 7 மணி முதல் 8 மணி வரை ''வில்லி பாரதம்'' எனும் பொருளில் பிரம்ம ஸ்ரீ பாலசர்வேஸ்வரக் குருக்கள் சொற்பொழிவு நிகழ்த்துவார். (க-139-30)

# மின்வெட்டு வேளை வீடுகளில் மின்குமிழ்கள் அபேஸ்!

வலி. கிழக்கு, மே 1

இரவு வேளைகளில் மின்வெட்டு அமுலானதும் வீடுகள் மற்றும் பொது இடங்களில் காணப்படும் மின் குமிழ்களை விசமிகள் திருடி வருவதாகக் கூறப்படுகிறது.

கல்வியங்காடு பகுதியில் கடந்த வாரம் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. இங்குள்ள ஆலயம் ஒன்றில வெளிப்புறமாக இருந்த மின் குமிழ்கள் அனைத்தும் திருடப்பட்டுள்ளன. சில வீடுகளிலும் வெளிப்புறங்களில் காணப்பட்ட மின் குமிழ்கள் மாயமாய் மறைந்துள்ளன.

கல்வியங்காடு ஆறுமுகம் வீதியில் இரு வீடுகளில் மின் குமிழ்கள் திருடப்பட்டுள்ளன. (ஐ-180)

## செஞ்சிலுவைக் குழுவிடம்
# சரணடைந்த இளைஞன் புனர்வாழ்வு முகாமுக்கு

யாழ்ப்பாணம், மே 1

படையினரால் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்ட பின்னர் தனது உயிருக்குப் பாதுகாப்புக் கோரிச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் சரணடைந்த இளைஞனைத் தெல்லிப்பழை புனர்வாழ்வுப் பாதுகாப்பு நிலையத்தில் கையளிக்க யாழ். மாவட்ட நீதிவான் இ. த. விக்னராஜா உத்தரவிட்டார்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் சரணடைந்த கொக்குவில் கிழக்கு காளி கோவிலடியைச் சேர்ந்த இட்டினன் இராசநந்தன் (வயது 25) என்ற இளைஞன் மீதான விசாரணைகளின் போதே நீதிவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

கடந்த மார்ச் மாதம் 29 ஆம் திகதி இந்த இளைஞன் படையினரால் கைது செய்யப்பட்டார். அதற்கான பற்றுச்சீட்டும் படையினரால் உறவினர்களிடம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் இளைஞன் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம் அவரது வீட்டுக்குச் சென்ற படையினர் கைதுசெய்த போது தம்மால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டை உறவினர்களிடமிருந்து பெற்றுச் சென்றுள்ளனர் என்றும் —

அதன்பின் கடந்த 26 ஆம் திகதி இந்த இளைஞன் விடுவிக்கப்பட்ட போதும் அவர் விடுதலை செய்யப்பட்டது தொடர்பாக ஆதாரபூர்வமான எந்தவொரு ஆவணமும் படையினரால் உறவினர்களிடம் வழங்கப்படவில்லை என்றும் —

இதனையடுத்துப் படையினரால் தனது உயிருக்கு ஏதேனும் அச்சுறுத்தல் ஏற்படலாம் என்ற காரணத்தால் இளைஞன் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவில் சரணடைந்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது.

விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் மேற்படி இளைஞனின் நிலைப்பாட்டைக் கருத்திற் கொண்டு அவரைத் தெல்லிப்பழை புனர்வாழ்வுப் பாதுகாப்பு நிலைய்த்தின் பொறுப்பாளரிடம் செஞ்சிலுவைக் குழுப் பிரதிநிதி அழைத்துச் சென்று ஒப்படைக்க வேண்டும் என்றும்—

புனர்வாழ்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி இம்மாதம் 31 ஆம் திகதி இளைஞனின் பாதுகாப்புப் பற்றிய அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் —

இது தொடர்பான கட்டளைகளைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்குமாறும் நீதிமன்றப் பதிவாளருக்கு நீதிவான் உத்தரவிட்டார். மேற்படி இளைஞனை எதிர்வரும் 31 ஆம் திகதி மன்றில் மீண்டும் ஆஜர் செய்யுமாறும் அவர் பணித்தார். (ஐ-6-9)

## திறப்பு விழா

நெடுந்தீவு, மே 1

புங்குடுதீவின் தற்காலிக கமநல கேந்திர நிலையத்தின் திறப்புவிழா எதிர்வரும் வியாழக்கிழமை காலை 10மணிக்கு நடைபெறும்.

தீவகம் தெற்கு பிரதேச செயலர் செ. இரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் மாவட்ட கமநலசேவை உதவி ஆணையாளர் க. சுந்தரேசன் நிலையத்தைத் திறந்து வைப்பார்.

பெருங்காடு தெற்கு ஜே-30 கிராமசேவை அலுவலர் பணிமனையில் இந்நிலையம் திறந்து வைக்கப்படும்.

புங்குடுதீவு, பெருங்காடு தெற்கு, வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கங்களின் அனுசரணையுடன் இவ்விழா நடைபெறவுள்ளது. (க-111)

## விரிவுரைகள் ஆரம்பம்

கொக்குவில், மே 1

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் முதலாம் தவணை விடுமுறை முடிவடைந்து நாளைசெவ்வாய்க் கிழமை விரிவுரைகள் ஆரம்பமாகும். (க-69)

## கொழும்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனின் அகதிகளுக்கான நிவாரணப் பணி பற்றிய விவரம்

தும்பளை, பருத்தித்துறை பரி. லூர்துமாதா கோயிலில் உள்ள அகதிகளுக்குச் சமையற் பாத்திரம், சிறார்களுக்குத் தினமும் பால்மா மற்றும் துவாய், மருந்து வகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சுற்கோவளம் புனித செபஸ்தியார் கோயிலில் மாலையில் பால்மா வழங்கப்பட்டு வருகின்றது.

அம்பன் முகாமிலுள்ளவர்களில்

**150 பேருக்குப் பிளாஸ்ரிக் வாளியும் 40 பேருக்குப் படுக்கை விரிப்புகளும் வழங்கப்பட்டன.**

செயலாளர்

**ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை.**

(சி/12013)

## பளை, மருதங்கேணி, சாவகச்சேரிப்
பிரதேசங்களிலிருந்து
## இடம்பெயர்ந்து வாழும் குடும்பங்களின் கவனத்துக்கு

பளை, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலிருந்தும், சாவகச்சேரிப் பிரதேச செயலர் பிரிவிலிருந்தும் கடந்த மார்கழி மற்றும் சித்திரை மாதங்களில் நடைபெற்ற அசம்பாவிதங்களினால் தங்கள் சொந்த இருப்பிடங்களிலிருந்து இடம் பெயர்ந்து, அதே பிரிவுகளில் அல்லது ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள முகாம்களிலும் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும் தற்காலிகமாக வதியும் குடும்பத்தவர்களுக்கு நிவாரணங்கள் உரியவாறு ஒழுங்குபடுத்தி வழங்குவதற்கு ''நிவாரண உதவிப் பதிவு அட்டை'' வழங்கப்படவுள்ளது.

எனவே இடம்பெயர்ந்து வாழும் குடும்பத்தின் குடும்பத் தலைவன்/தலைவி தங்களின் நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன், தவறாது மே மாதம் 02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தற்போது இடம்பெயர்ந்து வதியும் பிரதேச செயலர் அலுவலகம் சென்று மேற்படி நிவாரண அட்டையினைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இத்தினத்தில் இந்த நிவாரண அட்டைகளைப் பெறத்தவறின் பின்னர் அட்டைகள் வழங்கப்படமாட்டாது என்பதையும் வலியுறுத்தித் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அரசாங்க அதிபர்
யாழ். மாவட்டம்.

(சி/11995)

## 23 ஆம் ஆண்டு
## நீங்கா நினைவலைகள்

பூவுலகில் 05 – 07 – 1950



பரலோகில் 01 – 05 – 1977

### அமரர் குமரையா தேவராஜன்

அன்பும் பண்பும் உடையவனே
அவனியில் எமைத் தவிக்கவிட்டு
ஆண்டவன் நிழல் அடைந்தவனே
எம்முயிர் நிலைக்கும் மட்டும்
என்றும் மறவோம் உன் நினைவை

உங்கள் நினைவுகளுடன்
**மனைவி, மக்கள், குடும்பத்தினர்.**

28, றக்கா லேன்,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (75885)

## முதலாம் ஆண்டு
## நினைவலைகள்

மலர்வு 04 – 08 – 1930



உதிர்வு 13 – 05 – 1999

### திருமதி பொன்னன் பொன்னம்மா
திதி: 01 – 05 – 2000

ஆண்டொன்று சென்றதம்மா ஆறவில்லை எம் துயரம்
எம்பெருமான் சழலடியில் எந்தையோடிணைந்திரோ
இல்லை —
மக்களெல்லாம் எண்ணி மனங்கலங்கி நின்றிருந்தால்,
மறுபடியும் பிறந்து வந்தால் எம் மனக்கவலை
தீருமம்மா

அம்மா உன் பிரிவால் துயருறும்
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

கலாசாலை வீதி,
திருநெல்வேலி. (75823)

## மாதர் சங்கம் கோரிக்கை

வலிகாமம் தெற்கு, மே 1

பன்னாலைக் கிராமத்தில் மீளக்குடியமர்ந்துள்ள நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களின் சுகநலம் பேணுமாறு தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியிடம் பன்னாலை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் கோரியுள்ளது.

அண்மைக் காலத்தில் இக்கிராமத்தில் மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களின் சுகாதார வசதிகள் பேணப்பட வேண்டும். இக்குடும்பங்கள் குடிதண்ணீர் பெறும் சகல கிணறுகளுக்கும் குளோறின் இடப்பட வேண்டும், நலன்புரி சிகிச்சை நிலையங்களை ஒழுங்கு செய்து சலப்பரிசோதனைகள், குருதி அமுக்க பரிசோதனைகள் கண்பரிசோதனைகள் என்பன மேற்கொள்ளப்படுவதோடு வைத்திய வசதிகளும் ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்—

மாதம் ஒரு முறையாவது மாதர் சங்கத்தில் சுகாதாரம் சம்பந்தமான கருத்தரங்குகள் நடத்தப்பட வேண்டும் என்றும் சங்கம் கோரியுள்ளது. (ஐ-152)

## மெய்வல்லுநர் போட்டிகள்

வலிகாமம் தெற்கு, மே 1

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெற உள்ளன.

வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் தலைமையில் நடைபெற உள்ள இந்த நிகழ்வில் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

போட்டிக்கான சகல ஒழுங்குகளையும் வலிகாமம் வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. பாலசிங்கம் செய்துள்ளார். (ஐ-152)

## அ. அட்டைகள் வந்து சேர்ந்தன

தென்மராட்சி மே 1

தென்மராட்சி கிராம பிரதேச அலுவலர்களூடாக தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களில் 395 பேரின் தேசிய அடையாள அட்டைகள் பிரதேச செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

தொலைந்துபோன அடையாள அட்டைக்காக விண்ணப்பித்த 78 பேரின் அடையாள அட்டைகளும், புதிதாக விண்ணப்பித்த 317 அடையாள அட்டைகளுமே வந்துள்ளன.

இந்தத்தேசிய அடையாள அட்டைகள் அந்தந்த கிராம அலுவலர்களிடம் வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலக அடையாள அட்டைப் பிரிவினர் தெரிவித்தனர். (6-117)

## பிரதேச சபை அலுவலகம் இடமாற்றம்

தென்மராட்சி, மே 1

கொடிகாமம் கச்சாய் வீதியில் அடிக்கடி ஷெல்கள் வீழ்ந்து வெடிப்பதை அடுத்து கொடிகாமத்தில் இயங்கி வந்த சாவகச்சேரி பிரதேச சபையின் தலைமை அலுவலகம் மீசாலை புத்தூர் சந்திக்கு அருகில் உள்ள தனியார் கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகப் பிரதேச சபை செயலாளர் கு.ந. பாலச்சந்திரன் தெரிவித்தார்.

பளைப் பிரதேச சபைத் தலைமை அலுவலகமும் இக்கட்டடத்திலேயே இயங்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார். (6-117)

# ஜனாதிபதி அதிருப்தி

கொழும்பு, மே 1

நோர்வே அரசாங்கம் சமாதான முயற்சிகள் மேற்கொண்டுவரும்இவ்வேளையில் எதிர்பாராத விதமாக ஆனையிறவு படைமுகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலினால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதிருப்தி அடைந்துள்ளதாக ஏ. எவ். பி. செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 13 மாதங்களாக நடைபெற்று வரும் சமாதான முயற்சிகளுக்கு எந்தவித மதிப்பும் அளிக்கப்படவில்லை என்றும் ஜனாதிபதி அதிருப்தி கொண்டுள்ளார் என்று அந்தச் செய்திகள் மேலும் கூறுகின்றன. (5)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 25 – 08 – 1907



உதிர்வு 02 – 04 – 2000

### திருமதி றுத் செல்லம்மா கந்தையா
(முன்னாள் அதிபர், நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்)

கர்த்தருக்குள் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள் நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்".

ஏசாய:- 40:31

02—04—2000 அன்று காலமான திருமதி றுத் செல்லம்மா கந்தையா அவர்களது மரணத்தின்போது தந்தி, தபால் மூலமும் நேரிலும் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் நினைவு ஆராதனை நாளை (2-5-2000) செவ்வாய்க்கிழமை மாலை 5-00. மணிக்கு நல்லூர் புனித சென். ஜேம்ஸ் தேவாலயத்தில் நடைபெறும். இதில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிற்காக ஜெபிக்குமாறு அன்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

— குடும்பத்தினர்.

21, செங்குந்த வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி. (75878)

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



மலர்வு 17 – 09 – 1922

உதிர்வு 01 – 04 – 2000

### அமரர் வல்லிபுரம் கனகசிங்கம்
(இளைப்பாறிய ஆசிரியர்)
திதி:-01-05-2000
(துவாதசி)

மண்ணகம் நீ மறந்து மாதமொன்றானதப்பா!
விண்ணகம் நீ விரைந்திட எம் மகிழ்ச்சி போன
தப்பா
மக்கள் மருமகர்கள் மாசற்ற பேரர்கள் நாம்
மிக்க துயர் கொண்டோம் யாமது உம்
நினைவப்பா!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உங்கள் பாச உணர்வில்
**மக்கள் மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

அல்லாரை வீதி,
மீசாலை கிழக்கு,
மீசாலை. (75880)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னையின் மடியில்
16
—
05
—
1921

ஆண்டவன் அடியில்
01
—
04
—
2000



### அமரர் சின்னத்தம்பி பொன்னையா

திதி: 01–05–2000

எங்கள் குடும்பத்தின் குல விளக்கே
விண்ணுலகை நீங்கள் அடைந்து
ஒரு திங்கள் சென்றாலும் ஐயா!
உங்கள் பசுமை நினைவுகள்
எங்கள் உள்ளங்களில் என்றும் நிழலாடும்.

இன்று 01-05-2000 எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

நி. மு: புலோப்பளை, பளை.
த. மு: 61/2, இராமலிங்கம் வீதி,
முடமாவடி,
திருநெல்வேலி.

(75884)

# ஐ.தே.கவின் உதவிப்பொருள்களை ஏற்க இராணுவ ஆஸ்பத்திரி மறுப்பு

## காமினி அத்துக்கோறள குற்றச்சாட்டு

கொழும்பு மே 1

கொழும்பில் உள்ள இராணுவ வைத்தியசாலைக்கு ஐ. தே. கவினால் வழங்கப்பட்ட பத்துலட்சம் ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்களை ஏற்றுக்கொள்வதற்கு அந்த வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகள் மறுத்து விட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வைத்திய உபகரணங்களை பொறுப்பேற்க முடியாது எனச் சுட்டிக்காட்டிய வைத்திய அதிகாரிகள் இவற்றை ஜனாதிபதி செயலகத்தில் ஒப்படைக்குமாறு கூறியதாக ஐ. தே. க செயலாளர் காமினி அத்துக்கொறள தெரிவித்துள்ளார்.

ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த 26 ஆம் திகதி பிரஸ்தாப இராணுவ வைத்தியசாலைக்கு சென்ற சமயம் அங்குள்ள வைத்திய அதிகாரிகள் வைத்திய சாலைக்குத் தேவையான பொருள்களை பட்டியலிட்டுக் கொடுத்திருந்தனர். இந்தப் பொருள்களை நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு கொண்டுசென்றபோதே அவை ஏற்கப்படாது திருப்பி விடப்பட்டதாகக் காமினி அத்துக்கோறள தெரிவித்தார்.

எந்த ஒரு அரசியல்வாதியும் இராணுவ வைத்தியசாலைக்கு செல்வதற்கு அனுமதி அளிக்கக்கூடாது என்று இராணுவ வைத்தியசாலை அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(இ–5–4)

## புளொட் உறுப்பினரைக் காணவில்லை என தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 1

யாழ். நகரில் புளொட் உறுப்பினர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை முதல் காணாமல் போய்விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவைச் சேர்ந்த அன்ரன் முத்துக்குமாரு (வயது 20) என்பவரே காணாமல் போனவராவார்

கட்சியின் கட்டுப்பாடுகளுக்கு கட்டுப்பட முடியாமையால் இவர் கட்சியிலிருந்து தப்பிச் சென்றிருக்கலாம் என்று புளொட் வட்டாரங்கள் தெரிவித்தன.

புளொட் அமைப்பின் அடையாள அட்டையுடன் இவர் தப்பிச் சென்றிருப்பதால் கட்சியின் பெயரைப் பாவித்து சில நடவடிக்கைகளில் இவர் ஈடுபடலாம் என்பதால் பொதுமக்களை விழிப்பாக இருக்குமாறு மேற்படி கட்சியினர் எச்சரிக்கை செய்துள்ளனர்.

(இ–6–5)

## உணவுப் பொருள்கள் அன்பளிப்பு

வடமராட்சி கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து அம்பன், குடத்தனைப் பகுதிகளில் தஞ்சமடைந்திருக்கும் சுமார் 56 குடும்பங்களுக்கு சர்வோதயம் நிறுவனம் பாய்கள், பால்மா மற்றும் உணவுப் பொருள்களை அன்பளிப்புச் செய்துள்ளது

யாழ். மாவட்ட சர்வோதயம் நிறுவன செயல்திட்ட இணைப்பாளர் எஸ். வி. சங்கரப்பிள்ளை கடந்த வியாழக்கிழமை இவற்றை நேரில் மக்களுக்கு வழங்கினார்.

(இ–6–109)

## குளவி கொட்டி மாணவிகள் காயம்

தென்மராட்சி, மே 1

பாடசாலை முடிந்து மாணவிகள் வெளியேறிய வேளையில் மரத்திலிருந்து வீழ்ந்த கருங்குளவிக் கூடு கலைந்ததில் அதிலிருந்து வெளியேறிய குளவிகள் மாணவிகளைத் துரத்தித் தாக்கிய சம்பவம் கடந்த புதன்கிழமை சாவகச்சேரியில் இடம்பெற்றது.

குளவிகளின் தாக்குதலுக்கு இலக்கான க. பொ. த. சாதாரண தர வகுப்பில் கல்வி பயிலும் மாணவிகள் இருவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(இ-6-117)

# 14 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

(சித்திரை 29 - வைகாசி 06)

உயிர் நீத்த
உடன் பிறப்புக்களுக்கு



மீண்டும்
எம் கண்ணீர் அஞ்சலி

மறைந்த தலைவர்

## அமரர் சிறீசபாரெத்தினம் அவர்கள்

அன்னைத் தமிழ் மண்ணில் அழுகுரல்கள் ஓய்ந்து
அனைத்துச் சுதந்திரமும் அரசோச்சும் பொற்காலம்
விரைவாய் மலர்ந்து எங்கள் வீரர் கனவுகளை
விதைகளாய்த் தூவிடவே துணிந்து செயற்படுவோம்!

- தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
(ரெலோ)

TELO

(75846)

# உதயன்

## அர்த்தமுண்டா?

இன்று உலகத் தொழிலாளர் நாள்— மே நாள், எட்டு மணி நேர வேலை அனைத்துலக மட்டத்தில் சட்ட ரீதியாக்கப்பட்ட நாளே மே நாளாகக் கடந்த 113 வருடங்களாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

கடந்த நூறு ஆண்டுகளுக்கு மேலாகத் தொழிலாளர்களுக்குரிய பல புதிய புதிய உரிமைகள் அங்கிகரிக்கப்பட்ட போதிலும், சர்வதேச ரீதியாக அவை அமுல் செய்யப்பட்டு வந்த போதிலும், பல நாடுகளில் தொழிலாளர்களின் நலவுரிமைகள் மேம்பட்டதாக இல்லை; எதிர்மாறாக நலிவடைந்தே போகின்றன.

அபிவிருத்தி அடைந்து வரும் மூன்றாம் உலக நாடுகளில் புதிய பொருளாதாரக் கொள்கைகள் என்ற போர்வையில் ஏகாதிபத்தியம் ஊடுருவியுள்ளது. கடந்த வருடம் (1999) டிசெம்பர் மாதத்தில் சிற்றிலில் உலக வர்த்தக நிறுவன மாநாடு நடைபெற்ற வேளை இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் இதனை வெளிப்படுத்தியது.

சுதந்திர வர்த்தகக் கொள்கையின் அடிப்படையில், பல நாடுகளில் — மிகக் குறிப்பாக ஏழை நாடுகளில் — நடைமுறைப்படுத்தப்படும் பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள், பாதகமான விளைவுகளையே கொண்டு வருகின்றன. சிற்றிலில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் அதனையே வலியுறுத்திச் சொன்னது.

சுதந்திர வர்த்தகக் கொள்கை மூன்றாம் உலக நாடுகளின் மக்களின் பொருளாதார நிலையை மோசமாக்குவது மட்டுமன்றி பொருளாதாரத்தின் மூலதாரமான பூகோள வளங்களையும் — இயற்கை வளங்களையும் — நாசமாக்குகின்றது என்பது மற்றொரு படுபாதகமான விவகாரம்.

இந்த நாடுகளில் ஜனநாயகம் என்ற போர்வையில் ஏகாதிபத்தியம் ஊடுருவி உள்ளது போலவே, சுதந்திர வர்த்தகம் என்ற பேரில் பல்தேசிய நிறுவனங்கள் அந்தந்த நாட்டு பொருளாதார வளங்களை நாசமாக்குகின்றன; உறிஞ்சுகின்றன. அதனால் சுதேசிய மூல வளங்கள் சுரண்டப்படுவதோடு தொழிலாளர் மேம்பாட்டு நலன்களும் சில சந்தர்ப்பங்களில் தொழிலாளர்களின் அடிப்படைத் தொழில் உரிமைகள் கூடப் பாதிக்கப்படுகின்றன.

தனியார் மயப்படுத்தல் என்ற புனுகு பூசப்பட்ட திட்டத்தைக் கவர்ச்சிக் கருவாக்கி, மூன்றாம் உலகநாடுகளின் அரசாங்கங்களை மயக்கி அல்லது அரசுத் தலைவர்களை விலைகொடுத்து வாங்கி, ஏகாதிபத்திய நாடுகள் தனக்கு உகந்த வகையில் தொழிலாளர் உரிமைகளைப் பறித்து விடுகின்றன.

சுதந்திர வர்த்தகம், தனியார் மயப்படுத்தல், பல்தேசிய நிறுவனங்கள் என்ற முக்கூட்டுப் பரிமாணத்தினால் ஏழை நாடுகள் மேலும் ஏழைகளாகின்றன? இதனைவிட, இந்நாட்டு அரசாங்கங்களை இராணுவ மயப்படுத்தலிலும் தேசிய சிறுபான்மை இனங்கள் மீது அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடச் செய்வதிலும் முதலாளித்துவ நாடுகள் — ஏகாதிபத்தியம் — பெரு வெற்றி கண்டு வருகிறது.

இலங்கை போன்ற நாடுகளில் தனியார் மயப்படுத்தல் உயர மூலவளம் —இயற்கை வளம்— சுரண்டலால்நலியும்; மூலவளம் நலிய பொருளாதாரம் வீழும்; பொருளாதாரம் வீழ்ந்தால் தொழிலாளியின் உரிமைகள் பாதிக்கப்படும் என்ற புதிய முதுரையாக மாறியுள்ள இந்தக்காலத்தில் மேதினக்கொண்டாட்டங்களால் அர்த்தமுள்ள பயன் என்ன கிடைக்கும்?

# உரிமைக்குரல் எழுப்புவோம்!

# உறவுக்குக் கை கொடுப்போம்!!

இன்று மேதினம்; உரிமைகள் பறிக்கப்பட்ட தொழிலாளரின் உரிமைகள் உயிர்பெற்ற தினம். உரிமையும் உறவும் மனிதனின் இரு கண்களைப் போன்றவை. ஒன்றுக்கொன்று சார்பானவை. ஒன்று மறுக்க மற்றையது பாதிப்புறும். இஃது உள்ளங்கை நெல்லிக்கனி.

எமது அன்றாட வாழ்க்கையில் உரிமையும் கடமையும் வீட்டிலிருந்தே ஆரம்பமாகிறது. 'To Get Respect Give Respect' என்பார்கள். மனிதன் சூழலின் கைதி என்பர்.

★ எமது வீடுகளில் நாம் பிள்ளைகளின் உரிமைகளைக் கொடுக்காத இடத்துப் பிள்ளைகள் அதைப் பெறப் பல வழிமுறைகளைக் கையாளுவது கண்கூடு.

★ எமது வீடுகளில் மனைவியின்—கணவனின் உரிமைகள் மறுக்கப்படும் போது குடும்பத்தில் விரிசல் அதனால் சுவர்க்கமாயிருக்க வேண்டிய குடும்ப வாழ்வு நரகமாகிறது.

★ பாடசாலைகளில் மாணவரின் உரிமையும் கடமையும் ஒன்றாகக் கைகோர்த்துக் கொண்டு செல்லாவிட்டால் அங்கு மாணவர் போராட்டம் போன்ற இன்னோரன்ன விளைவுகள் நிகழ்கின்றன.

★ தொழிற் கூடங்களில் தொழில் கொள்வோருக்கும் தொழில் கொடுப்போருக்கும் இடையே ஏற்படும் முரண்பாடு பலப்பல.

- தொழிலாளர் தொழிற் சங்கம் அமைக்கும் உரிமை
- வேலை நேரம்
- விடுமுறை
- மேலதிக கொடுப்பனவு
- விபத்து ஏற்படும் போது நஷ்டஈடு
- போனஸ்
- தொழிலாளர் நலன்புரி
- Collective Bargaining
- ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதியம்.

மேலே கூறப்பட்டவைகள் எழக் காரணம் என்ன? உரிமைகள் மறுக்கப்பட உறவு சீரழிகிறது. தொழில் கொடுப்போன் தானும் ஒரு மனிதன் என்ற நிலைமையை மறந்ததே இதற்கான காரணமாகும். மற்றவன் சண்டை பிடித்துத்தான் தன் உரிமையை நிலைநாட்ட இடம் ஏன் வைக்கவேண்டும்? இஃது காட்டு விலங்குகளின் குணங்களை ஒத்ததன்றோ? விலங்குகள் தான் தத்தம் தேவைக்கு வலியாராகவும் மெலியார் மேல் சென்று தத்தம் தேவையைப் பூர்த்தி செய்கின்றன. ஆனால் ஆறறிவு படைத்த நாமும் அப்படியா?

எப்போது ஒரு தொழில் கொடுப்போன் மாற்றானையும் தன்னைப்போல் நேசித்து தான் தொழிலாளியின் நிலையிலிருந்து எவ்வாறு அவன் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்குத் தான் முகம் கொடுக்க வேண்டியிருக்கும். 'தானுமதுவாகப் பாவித்து' என்று சற்றுச் சிந்தித்தால் தொழிலாளர் சட்டம், போராட்டம் போன்றவை எழ முடியாது. அன்பு உள்ளத்திலிருந்து வருவது 'உன்னைப் போல மற்றவனையும் நேசி' என்று பைபிள் கூறுகிறது. தொழிலாளரை வேலைக்கு அமர்த்தும்போது அவனது உரிமையும் தன் கடமையும் நன்கு தெரிந்து இருக்க வேண்டும். என்னிடம் முதலிருக்கிறது; அவனுக்குப் பணம் தேவை; ஆகவே நான் போட்டதே சட்டம் என்று தேவைக்கும் கேள்விக்கும் முடிச்சுப்போடக்கூடாது ஒரு தொழிலாளி ஒரு மனிதனாவான். அவனுக்கென்று சில பல உரிமைகளை உங்களைப் போன்ற முதலாளிகள் வழங்காததால் சட்டத்தின் துணை கொண்டு கேட்கிறான் (கேட்க வைக்கப்படுகிறான்) அதை நானாகப் பார்த்துக் கொடுத்து விட்டால் அவனும் அவன் குடும்பமும் வாழ்த்துமே மாடு போல் உழைத்துக் களைத்த பின்னரும் அவனுக்குக் கிடைக்க வேண்டிய பணம் கிடைக்காத விடத்து அவன் சமூகத்தின் ஒரு பாவம் செய்த ஆத்மாவாகி விடுவான், அவனுக்கு ஒரு சமூகப் பாதுகாப்பு வேண்டும்.

இவையெல்லாம் எப்போது சாத்தியப்படும். 'திருடனாய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது' என்றார் பட்டுக்கோட்டையார். தொழில் கொள்வோருக்கும் கொடுப்போருக்கும் இதைப்பற்றிய விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வேண்டும். எப்படி? தொழிற்சட்ட திட்டங்கள், தொழிலாளர் உரிமைகள், கடமைகள் பற்றி முறையான கல்வி வழங்கப்படவேண்டும். இக்கைங்கரியத்தை யாழ். மக்களுக்கு வழங்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முன்வந்துள்ளது. 'தொழிலாளர் கற்கை நெறி' ஆரம்பிக்கப்பட்டு பலர் பயன்பெறும் வகையில் அதை உயர்நிலைக்குஉயர்த்த யாழ். பல்கலைக்கழகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கற்கை நெறியில் தொழில்சார் எல்லோரும் பங்குபற்றிப் படித்து பல தொழில் முகாமைத்துவ நுணுக்கங்களை, தொழிற் சட்டங்களை தொழிலாளர் உரிமைகளை அறிந்து செயற்பட்டால் தொழில் நீதிமன்றம், தொழிலாளர் பிணக்கீடு Labour Tribunal போன்றவை எம்மட்டத்தில் இருந்து விலகி எம்முள் சுமுக நிலை ஏற்பட ஏதுவாகும். ஆகவே நாம் காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டும். 'ஒருவனுக்கு உணவாக மீனைக்கொடுத்து எம்மில் தங்கியிருக்க வைப்பதிலும் அவனுக்கு மீன் பிடிக்கக் கற்றுக்கொடு' என்று ஒரு சீனப்பழமொழியுண்டு நாமும் தொழிலாளர் சட்டதிட்டங்களை, உரிமை கடமைகளைக் கற்றுணர்ந்து சமத்துவமான உலகைப் படைத்தோருடன் கைகோர்த்துச் செல்வோமாக! ★

க. பரராசசேகரன்

## உழைப்பவர் உயர வேண்டும்

ஏதினி அடிமை வர்க்கம்
எனக்குரல் உயர்த்தி வந்த
"மேதினம்" வாழ்க! மண்ணில்
மேலார் கீழாரென்ற
ஆதிக்கம் செய்து வாழ்ந்த
ஆணவம் அழிந்த அந்நாள்
மேதினி போற்றி வாழ்த்தும்
"மே" நாளே அந்நாள் அன்றோ?

"வியர்வையின் துளிகளே உம்
விழா நாளே மேநாள்! கைகள்
உயர்வினை உரத்துக் கூறும்
ஒப்பற்ற நாளே இந்நாள்
அயர்வின்றி உழைப் போனுக்கே
ஆயிரம் உரிமை மீட்ட
உயர்வான "மேல்நாள்" மேநாள்!
ஒப்பிலா இந்நாள் வாழ்க!

நாட்டினில் சமுதா யத்தில்
நலநீதி கிடைப்ப தற்குத்
திட்டிடும் திட்டம் வேண்டும்
சிந்தனை மாறல் வேண்டும்
விழலுக்கு நீரைப் பாய்ச்சும்
வேதனை ஓட வேண்டும்
உழைப்பவன் உயர வேண்டும்
ஒற்றுமை தழைக்க வேண்டும்.

- மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன்.

## யாழ். கல்விக் கல்லூரி ஆரம்ப விழா நாளை

வலி. கிழக்கு, மே 1

யாழ். தேசிய கல்விக் கல்லூரியின் ஆரம்ப விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்கு, கல்லூரியின் பீடாதிபதி தி. கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஆசியுரையினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும் யாழ். ஆயர் அதிவந். தோமஸ் சௌந்தரநாயகமும் வழங்குவர்.

பிரதம விருந்தினர்களாக கல்வியியற் கல்லூரிகளின் ஆணையாளர் எஸ். நிகால் கேரத், யாழ். மாவட்ட அரச அதிபர் க. சண்முகநாதன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, வலி. கிழக்குப் பிரதேச செயலர் கே. கேதீஸ்வரன், யாழ். மாவட்ட மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளர் கலாநிதி எஸ். தணிகாசலம் பிள்ளை ஆகியோரும் கலந்து கொள்வர்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ், பேராசிரியர் வ. ஆறுமுகம், வைத்திய கலாநிதி லயன் வை. தியாகராஜா, யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் எஸ். சண்முகநாதன், எஸ். கணேசமூர்த்தி, தமிழர் ஆசிரிய சங்க சிரேஷ்ட உதவிச் செயலாளர் எஸ். மகாசிவம், கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் மு. பரம்சோதி, பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் க. சதாசிவமூர்த்தி ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

விசேட வாழத்துப்பா உரையினை மகாவித்துவான் பிரம்மஸ்ரீ வீரமணிஐயர் வழங்குவார்.

கல்விக் கல்லூரிக்கு அனுமதி பெறும் புதிய மாணவர்களை கோப்பாய் கலாசாலை மாணவர்கள் வரவேற்று அன்றைய தினம் மதிய போசன ஒன்று கூடல் நிகழ்வினை நடத்தவுள்ளனர்.

(ஐ-180)

## நாளை

சித்திரை 20
செவ்வாய்க்கிழமை
திதி: திரயோதசி
பிற்பகல் 1.07 வரை.
நட்சத்திரம்: ரேவதி
முன்இரவு 11.08 வரை.
சுபநேரம்: 11.56—1.26
ராகுகாலம்: 2.26 3.56
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## மே தினக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், மே. 1

புதிய ஜனநாயகக் கட்சியின் வடபிராந்தியக் கிளையினரின் மே தினக் கூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கா. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறும். (க-9)

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 1

நல்லூர் பிரதேச சபையும சபைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களும் இணைந்து நடத்தும் மே தினக்கூட்டம் கொக்குவில் நூலக கேட்போர் கூடத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஓய்வு பெற்ற ஆசிரியர் செ. குஞ்சிபாதம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் எஸ். மணிபல்லவராஜன், வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் என். திரிலோகநாதன், பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றுவார்கள். (ஐ-5)

★ ★ ★

வடபகுதி தொழிற்சங்கங்கள் இணைந்து நடத்தும் மே தினப் பொதுக்கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். (ஐ-6-9)

★ ★ ★

ஈ.பி.டி.பி அமைப்பு திவகதத்தில் நடத்தும் மேதினப் பேரணி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வேலணையில் ஆரம்பமாகி ஊர்காவற்றுறை திறந்த வெளி அரங்கைச் சென்றடையும். (ஐ-6-73)

### உதய வாக்கு

ஆசையற்றவர்களுக்குத் துன்பம் இல்லை. ஆசை யிருப்பின் எல்லாத் துன்பங்களும் மேலும் மேலும் வந்து கொண்டிருக்கும்.

- திருவள்ளுவர்

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

இல. 218, குருசோவீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனுமிடத்தைச் சேர்ந்த டரியஸ் மிஷாம் வில்பிறெட் என்பவரது வி. அ. அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.
(75890)

## கூட்டுறவுச் சங்கப் படகு சேவையில்

நெடுந்தீவு— குறிகாட்டுவான் கடற்போக்குவரத்துச் சேவையில் புங்குடுதீவு நயினாதீவு பல நோ. கூ. சங்கப் படகு ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

தினசரி ஒரு சேவை மட்டுமே இடம் பெறுகின்றது.

நெடுந்தீவில் இருந்து காலை குறிகாட்டுவானுக்கு புறப்படும் இப்படகு பிற்பகல் 2-30 மணிக்கு மீண்டும் குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்குச் செல்லும். (க-111)

## அப்பியாசக் கொப்பிகள் வழங்கல்

மறவன்புலோ சகலகலா வல்லிவித்தியாலயத்தில் கல்வி கற்றுஇடப்பெயர்வின் காரணமாக தற்போது வேறு பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான அப்பியாசக்கொப்பிகள் எதிர்வரும் வியாழக்கிழமை சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் இயங்கும் சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்தில் வழங்கப்படவுள்ளதாக வித்தியாலய அதிபர் செ. ஞானலிங்கம் அறிவித்துள்ளார். (க-111)

### விற்பனைக்கு

20'' Colour T.V, 12'' Black & WhiteT.V, Ironbox, Suitcase, Wallclock, Blanket, Gate, Motor, கார் Piston set, அலுமாரி, குளிர்சாதனப்பெட்டி என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: வே. குமாரசாமி, பெரிய அரசடி, சாவகச்சேரி.
(75879)

பால் எடுத்துக்கொண்டிருக்கும் நல்லின ஜமுனாபாரி ஆடும் கடாக்குட்டியும் இனவிருத்திக்கேற்ற நல்லின ஜமுனாபாரி கடாக்கள், மறிக்குட்டிகள், வான்கோழிகள், கோழிக்கூடுகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: திங்கள், 75, செட்டித்தெரு, நல்லூர். (75862)

### SPOKEN ENGLISH

பாடசாலை ஆசிரியர், வேலை பார்ப்பவர்க்கான விசேட ஆங்கிலப் பயிற்சி காலை 6.30 க்கும் மாலை 4 மணிக்கும் ஆரம்பமாகியுள்ளது. ஆசிரியர்: ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை.
(75825)

### ENGLISH LITERATURE

A/L ஆங்கில இலக்கியம் பயில விருப்புடைய மாணவர் சிலரின் கோரிக்கைக்கிணங்க மே 5ஆம் திகதிமுதல் இவ்வகுப்பு ஆரம்பமாகின்றது. தொடர்பு: வ. கோவிந்தபிள்ளை, இல. 62, பழம் றோட், கந்தர்மடம்.
(75881)

## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

**Jaffna Education Centre**

(சாந்தி சினிமா முன்பாக, மேல்மாடியில் வலது பக்கம்)

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**
**சிங்களம், SHORTHAND, TYPING**

ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.

புதிய பிரிவு ஆரம்பம்: 2 - 5 - 2000

– நிர்வாகி.

(75897)

## வெளிவாரிப்பட்டப் பகுதி யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை

பின்வரும் கற்கை நெறிகளுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.

## மாலை நேர வகுப்புக்கள்

G. A. Q. யாழ்- பல்கலைக்கழகம்
G, A. Q. பேராதனைப் பல்கலைக்கழகம்
B. A. Part I யாழ்-பல்கலைக்கழகம்
B, A. Part II யாழ்-பல்கலைக்கழகம்
B. A. Final பேராதனைப்பல்கலைக்கழகம்

1. ஆங்கில இலக்கியம் உட்பட அனைத்துப் பாடங்களும் போதிக்கப்படும்.
2. விரிவுரைவகுப்புக்களுக்கு மேலதிகமாக (Tutorial-Class) கட்டுரை வகுப்பு மேற்கொள்ளப்படும்-
3. பல்கலைக்கழக தரமொத்த நூல் நிலைய வசதி சகல மாணவர்களுக்கும் வழங்கப்படும்.

வட்டுக்கோட்டையை அண்டிய சூழலில் வாழும் மாணவர்களின் வசதி கருதி இந்த மாலை நேர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படுகின்றன.

ஆரம்பம்: 7–5–2000

விவரங்களுக்கு:
பதிவாளர்,
யாழ்ப்பாணக் கல்லூரி
வட்டுக்கோட்டை.

(சி/11918)

# திருமண அழைப்பு

''கர்த்தருக்கு காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள்'' ஏசாயா 30: 18

அன்புடையீர்!

நிகழும் 2000 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 3 ஆம் நாள் புதன்கிழமை காலை 10. 00 மணிக்கு உடுவில் அப்போஸ்தல சபையில்

| எமது சிரேஷ்ட புத்திரன் | எமது சிரேஷ்ட புத்திரி |
|---|---|
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **உதயசங்கர்** | **திருஷ்சா (பிருந்தா)** |

இவ்விருவரும் இல்லறம் என்ற நல்லறத்தில் இணைய தேவகிருபை பெற்றுள்ளார்கள். இந்த இனிய நன்னாளில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

இங்கனம் தங்கள் நல்வரவை நாடும்:


**திருமதி சி. கமலாம்பாள்**
அட்டகிரி வீதி,
நவாலி வடக்கு, மானிப்பாய்

**தானியேல் கந்தசாமி (ராஜா)**
காளி கோயிலடி,
சங்கானை,

(இரு வீட்டார் அழைப்பு)

ஜெப ஆராதனையும் வரவேற்பு உபசாரமும் மணமகள் இல்லத்தில் (05. 05. 2000) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3. 30 மணிக்கு நடைபெறும்.

(75893)



உ
சக்தி துணை

## நயினாதீவு
## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
## விக்கிரம வருடம்: 2000

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருஷம் வைகாசி மாதம் 20ஆம்நாள் (02-06-2000) வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் அம்பாளின் இவ் வருட மஹோற்சவம் ஆரம்பமாகும்.

02 - 06 - 2000 வெள்ளி பகல் 12. 00 மணிக்கு கொடியேற்றம்
08 - 06 - 2000 வியாழன் இரவு கைலைக் காட்சி
10 - 06 - 2000 சனி பகல் எழுந்தருளி அம்பாளுக்கு (108) அஷ்டோத்திர சங்காபிஷேகம்
11 - 06 - 2000 ஞாயிறு இரவு மஞ்சத் திருவிழா
12 - 06 - 2000 திங்கள் பகல் வாயுபட்சணி நாகம் வீதியுலா
14 - 06 - 2000 புதன் பகல் கைலைக்காட்சி, இரவு சப்பறம்
15 - 06 - 2000 வியாழன் பகல் 10 மணிக்கு தேர்
16 - 06 - 2000 வெள்ளி காலை 6 மணிக்கு தீர்த்தம் இரவு கொடியிறக்கம், திருவூஞ்சல்
17 - 06 - 2000 சனி இரவு தெப்பத் திருவிழா (பூங்காவனம்).

அம்பாளைத் தரிசிக்க, அடியார்களை வருக வருகவென வேண்டிக் கொள்வதுடன் அம்பாளின் பெயரால் எவரிடமும் எப்பொருளையும் வழங்க வேண்டாம் எனவும் கேட்டுக் கொள்கின்றோம். வருகை தரும்போது, இயன்ற மட்டும் பொதிகளைக் குறைத்துக் கொண்டால் பிரயாணம் இலகுவாக அமையும்.

வருகை தரும் அடியார்களுக்கு வழமைபோல் பிரயாண, குடிதண்ணீர், உணவு, சுகாதார வசதிகளுக்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் 11 - 06 - 2000 ஞாயிற்றுக்கிழமையன்று பகல் 8,52 மணிக்கும் 10.22 மணிக்கும் இடையேயான சுபவேளையில்

அராலியூர் சிற்பகலாபமணி திரு. சின்னத்தம்பி அமரசிங்கமும் சகோதரர் சின்னத்தம்பி கணேசலிங்கமும் உறவினர்களும் இணைந்து உருவாக்கிய புதிய கலை மிளிரும் சிற்பத் திருமஞ்சம் வெள்ளோட்ட விழாவும் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது என்பதையும் அறியத் தருகின்றோம்.

அம்பிகையின் திருவருள் அனைவருக்கும் கிடைப்பதாகுக!

**அறங்காவலர் சபையினர்.**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்**
**நயினாதீவு.**

01 — 05 — 2000 (75731)

# மேதினம் 2000
## உழைப்போர் தினத்தில் எம் தேச மக்களுக்கு!



அன்பார்ந்த தமிழ்ப் பேசும் மக்களே!

இன்றைய தினம் ஒரு வீரியதினம். தொழிலாளர் வர்க்கம் அணி திரண்டெழுந்த சூரிய தினம். பெருங்காட்டுத் தீயை மூட்டிய சிறு துளி சுடர் விட்ட தினம். எட்டு மணி நேரம் வேலையென்று வரையறுக்க சிக்காக்கோ நகரில் உழைப்பாளர் வர்க்கம் இரத்தம் சிந்திய தினம். உலகம் எங்கும் நினைவு கூரப்படும் தொழிலாளர் தினம்.

உரிமைகள் போராடிப் பெறவேண்டியவை. போராட்டத்தின் மத்தியில் வாதாடியும் நிலைநாட்டப்பட வேண்டியவை. இயற்கையின் நியதிகளைக் கண்டறிந்து கட்டுப்படுத்தவும், ஆதிக்க சக்திகளின் அசுரப் பிடியில் இருந்து விடுபடவும் மனிதகுலம் தொடர்ச்சியாக நடத்திய கடுமையான போராட்டத்தின் விளைவாகவே இன்றைய உலகம் மலர்ந்திருக்கின்றது. கணனிகள் யுகத்தில் உலகமே ஒரு சிறு கிராமமாகச் சுருங்கிச் சிறுத்து பரந்த மனப்பான்மையுடன் இனம், மொழி, தேசம் என்ற எல்லைகள் கடந்து மானிடம் மனப் பூரிப்பை எய்தி வருகிறது.

ஆனால் மானிடத்தின் இந்த வெற்றிகள் எங்கள் தேசத்தின் வாசல்வரை எட்டுவதை போரின் நெருக்கடிகள் பின்தள்ளுகின்றன. போக்குவரத்து மார்க்கமின்றிப் பரிதவிக்கும் நிலையும், தொலைத் தொடர்புகள் இல்லாமல் துவளும் சூழலும், மின்சார வசதிகள் நிலைக்குமா என்ற ஏக்கமும் நிறைந்திருக்க உணவுக்காக – மருந்துக்காக உரத்துக் குரலெழுப்பவேண்டிய அவலம் நிரம்பிய அகதி வாழ்க்கையே எங்கள் தேசத்தில் பெரும்பாலானவர்களுக்கு வாய்த்திருக்கின்றது. அள்ளப்பட்ட ஆயுதங்களின் எண்ணிக்கை, பலியானவர்களின் தொகை என்ற அடிப்படையிலான வெற்றி முழக்கங்கள் தேசத்தில் எரிகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வைக் கொண்டுவருவதாக இல்லை.

மணமாகாமலேயே விதவைகள் போலாகி நிற்கும் முதிர் கன்னிகள், இளம் வயதிலேயே கைம்பெண்களாகி நிற்கும் தாய்மார்கள், அநாதைகள் ஆகிநிற்கும் சிறுவர்கள் என்றவாறாக ஆதரவற்றோர் நிரம்பிய சமூகமாக எமது இனம் மாறிக்கொண்டிருக்கிறது. இழப்புக்களைச் சந்திக்காதவர்கள் என்று எவரும் இல்லை என்பதுவே யதார்த்தமாகியுள்ளது.

கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட வயல்கள், பாய்விரித்து படகு செலுத்தி மீன்பிடித்து வாமுடியாத கடற்பரப்பு, மூடப்பட்டுக்கிடக்கும் தொழிற்சாலைகள் என்று உற்பத்திகள் முடக்கப்பட்ட சூழலில் நாளாந்த வாழ்க்கையை நகர்த்த வேண்டிய தர்மசங்கடம் இத்தனைக்கும் மேலாக நிச்சயமற்றதான பாதுகாப்பு நிலைவரங்கள்.

இத்தனைக்கும் மத்தியில் தப்பித்து ஓடாமல் – தத்தளித்து மூழ்காமல் இத்தேசத்தில் வாழும் உங்களுடன், எங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்கின்றோம். இலக்கற்ற யுத்தத்தால் உழைக்கின்ற மக்கள் இருக்கின்ற சொற்ப உரிமைகளையும் கூட இழக்கின்ற நிலைமைதான் தொடர்கின்றது. எனினும் மனித உயிர்களை அழிக்கும் யுத்தத்தை வெறுப்பவர்கள் என்பதற்காக உரிமைப் போராட்டத்தின் எதிரிகள் என்பது அர்த்தமல்ல.

வடக்கு – கிழக்கு எமது தாயகப் பிரதேசம். இங்கு தன்னாட்சியுடன் சுதந்திரமாக – கௌரவமாக வாழக்கூடிய ஜனநாயகச் சூழ்நிலை. இதுவே தேசத்தின் இன்றைய தேவை.

இதற்காக உலகத் தொழிலாளர் தினத்தில் ஒடுக்கப்படுகின்ற தேசத்தின் மக்களாகிய நாமும் விழிப்படைவோம். உறவுக்குக் கரங்கொடுக்கவும், உரிமைக்குக் குரல் கொடுக்கவும் ஒன்றிணைவோம். ஐக்கியமே பலம். ஒற்றுமையே ஜெயம் என்பதுணர்ந்து முரசறைவோம். சமாதான சகவாழ்வு சாத்தியமாகப் பாடுபடுவோம்.

*வாழ்க தொழிலாளர் தினம்!*

*வெல்க சமாதானம் சகவாழ்வு!!*

*'தேசத்துக்காகத் தியாகங்களை ஏற்போம்*
*என்றும் நாம் மக்களின் சேவகர்கள்'*

ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி (ஈ.பி.டி.பி.)
யாழ். மாவட்டம்
01-05-2000.

(75671)

# மே தினத்தையொட்டி தமிழ்க் கட்சிகள் அறிக்கை

யாழ்ப்பாணம்,மே1

தொழிலாளர் தினமான இன்று அனுஷ்டிக்கப்படும் மேதினத்தை யொட்டித் தமிழ் அரசியல் கட்சிகள் அறிக்கைகளை விடுத்துள்ளன.

### புளொட்

புளொட் அமைப்பு விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உழைக்கும் வர்க்கத்தினரின் உரிமைகள் மறுக்கப்படாது, மதிக்கப்பட்டு பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும். இதற்காக அனைத்துத் தொழிலாளர்களும் இத்தினத்திலே ஒற்றுமையுடன் ஓரணியில் நின்று குரல் கொடுக்க வேண்டும்.

தமிழ்ப் பேசும் மக்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தொழில் தடைகள் நீங்கி அவர்கள் சுதந்திரமாக, உரிமையுடன் தொழில் புரியக்கூடிய சூழ்நிலை உருவாக சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் ஒன்றுபட்டுச் செயல்பட இன்றைய தொழிலாளர் தினத்திலே உறுதிகொள்வோம் - என்றுள்ளது.

### ஈ.பி.ஆர்.எல்.எவ்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் யாழ். மாவட்டச் செயலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மேதினம் தொழிலாளர்களின் எழுச்சியை, வெற்றியை நினைவு படுத்தும் தினமாகும். தமது இலாபம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருந்த முதலாளிகளின் பிடிக்குள் சிக்கி தொழிற்சாலைகளில் தினமும் பல மணி நேரம் உழைக்க வேண்டிய கட்டாயத்திலிருந்த தொழிலாளர்கள் நாளொன்றுக்கு எட்டு மணித்தியாலங்கள் மட்டுமே வேலை செய்யும் உரிமையைப் பெறுவதற்கு ஜனநாயக முறைப்படியான பல போராட்டங்களை முன்னெடுத்தனர்.

அவர்களை இரத்தம் சிந்த வைத்தது முதலாளி வர்க்கம். ஆனால் தொழிலாளர்களின் ஒற்றுமையும் உறுதியும் அவர்களுக்கு வெற்றியைத் தேடித் தந்தது - என்றுள்ளது.

(இ-7)

# முப்படைத் தளபதிகளும் பதவி விலக வேண்டும்

## தேசப்பிரேமி பிக்கு முன்னணி கோரிக்கை

கொழும்பு,மே1

ஆனையிறவுத் தளத்தை மீண்டும் கைப்பற்றத் தேவையான சகல நடவடிக்கைகளையும் முப்படைத் தளபதிகள் எடுக்கவேண்டும். இல்லையேல் அவர்கள் பதவி விலக வேண்டும் என்று தேசப்பிரேமி பிக்கு முன்னணிச் செயலாளர் பெங்கமுவே நாயக்க தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆனையிறவுத் தோல்வி தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இப்படித் தெரிவித்துள்ளார்.

முப்படைத் தளபதிகள் நடவடிக்கையை மேற்கொள்ளாவிட்டால் பதவி விலக வேண்டும் அல்லது அரசாங்கம் அவர்களை விலக்கி தகுதி வாய்ந்தவர்களை தளபதிகளாக நியமிக்க வேண்டும். ஆனையிறவுத் தோல்விக்கான முழுப் பொறுப்பையும் முப்படைத் தளபதிகளே ஏற்கவேண்டும் - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-க)

# போர் நிறுத்தம் செய்யுமாறு இரு தரப்புக்கும் கோரிக்கை

கொழும்பு,மே1

ஆனையிறவில் ஏற்பட்டுள்ள இழப்புக்களை அடுத்து ஸ்ரீலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் போர் நிறுத்தம் செய்யவேண்டும் என்று பல அமைப்புக்கள் இரு தரப்பினரையும் கோரியுள்ளன.

தேசிய சமாதானப் பேரவை, காணாமற்போன படையினரின் பெற்றோர், பாதுகாவலர் சங்கம், காணாமற்போன படையினருக்காக நடவடிக்கை எடுக்கும் அமைப்பு, முன்னாள் படையினர் அமைப்பு ஆகியன இணைந்து இரு தரப்புக்கும் எழுதியுள்ள கடிதத்தில் இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தொடரும் போரினால் இழப்புக்களே அதிகரித்துள்ளன. எனவே உடனடியாகப் போர் நிறுத்தத்தை இரு தரப்பினரும் கடைப்பிடிக்க வேண்டும்.

படை நடவடிக்கை மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. பேச்சுவார்த்தை மூலமே இதற்குத் தீர்வு காண முடியும். எனவே இதற்கான வழிவகைகளை இரு தரப்பினரும் எடுக்கவேண்டும் - இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-க-3)

### படையினருக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போர்க்கப்பல்கள், தாக்கி அழிக்கும் திறன் கொண்ட கப்பல்கள், கடலுக்கு அடியில் வைக்கும் கண்ணி வெடிகளைக் கண்டறிந்து அகற்றும் சிறப்புப் படகுகள், அதிவேகத் தாக்குதல் திறன் கொண்ட படகுகள் மற்றும் ரோந்து படகுகள் ஆகியவற்றைப் பெற்றுத்தருமாறு கடற்படையும் -

கோரியதை அடுத்தே அவற்றைக் கொள்வனவு செய்ய பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (இ-3-7-8)

### பளை நகரப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நகரம் தம் வசமானதாக விடுதலைப் புலிகள் நேற்றிரவு விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

பளையில் இருந்து வடக்கு நோக்கிப் படையினர் பின்வாங்கியுள்ளதாக தமக்கு படை உயர் அதிகாரிகள் தெரிவித்ததாக இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸ் பி.பி.ஸி. சிங்கள சேவைக்குத் தெரிவித்தார்.

ஆனால் நேற்றுக்காலை முதல் மாலை வரை அங்கு சண்டை இடம் பெற்றதாகத் தமக்குத் தகவல் கிடைத்தது என்று தெரிவித்த இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பாலித பெர்னாண்டோ, பளை நகர் விடுதலைப் புலிகள் வசம் வீழ்ந்த தகவலை ஊர்ஜிதம் செய்ய மறுத்துள்ளார்.

படையினர் பாதுகாப்புக்காக தந்திரோபாயமாகச் சில நடவடிக்கைகளை எடுத்திருப்பார்கள் என்று இராணுவப் பேச்சாளர் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

அதே சமயம் பளை நகரைக் கைப்பற்றிய புலிகள் முகமாலை வரை முன்னேறியுள்ளதாக சர்வதேச செய்தி ஏஜென்ஸி ஒன்று நேற்றிரவு தெரிவித்தது. (இ-3-7-8)

### தொண்டு நிறு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் தற்சமயம் நிலவும் பதற்றமான, சுமுகமற்ற சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு வெளிநாடுகள் இந்த அமைப்புகளின் செயற்பாடுகளுக்கு அனுமதி மறுத்துள்ளன என்றும் -

இதன் காரணமாக அந்த அமைப்புக்கள் தமது பணிகளை நிறுத்தவுள்ளன என்றும் - தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம் - தற்சமயம் மேற்கொண்டுள்ள செயல் திட்டங்கள் முடிவுடையும் வரையும் இந்த நிறுவனங்கள் பணிபுரியும் என்று நிறுவனங்களுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

### துப்பாக்கிச்சூடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கறுப்புப் பெட்டியில் பதிவு செய்யப்பட்டுள்ள விவரங்களை அனுப்பிவைக்குமாறு உக்ரைன் அதிகாரிகளை இலங்கை அரசு கோரியுள்ளது.

உக்ரைனிலிருந்து கறுப்புப் பெட்டியில் உள்ள தகவல்கள் கிடைத்ததும் இந்த விமான விபத்துச் சம்பவம் தொடர்பாக இலங்கை அரசாங்கம் இறுதி அறிக்கை ஒன்றை வெளியிடும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

விமானம் வானத்தில் வெடித்துச் சிதறாமல் தீப்பிடித்து விழுந்ததால் துப்பாக்கிச் சூடு அல்லது ஏவுகணைத் தாக்குதலே காரணமாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

(இ-க-9)

# வடமராட்சி கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்த பலருக்கு இன்னும் நிவாரணம் இல்லை

வடமராட்சி,மே1

வடமராட்சி கிழக்கிலிருந்து இடம் பெயர்ந்து பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ள மக்களுக்கு ஒரு மாத காலத்துக்கு மேலாகியும் உலர் உணவு நிவாரணமோ அல்லது ரூபா 2 ஆயிரம் கொடுப்பனவோ வழங்கப்படவில்லை என முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

வடமராட்சி கிழக்கில் நாகர் கோயில், செம்பியன்பற்று, மருதங்கேணி, தாளையடி ஆகிய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து அம்பன், குடத்தனை, மணற்காடு, பொற்பதி ஆகிய இடங்களில் தங்கியுள்ள 265 குடும்பங்களுக்கு வடமராட்சிக் கிழக்கு உதவி அரச அதிபர் அலுவலகத்தினால் விசேட உலர் உணவு நிவாரணம் ஒரு முறை வழங்கப்பட்டுள்ளது. உடன் வழங்கப்பட வேண்டிய 2 ஆயிரம் ரூபா நிவாரணம் தொடர்பான விவரப் பட்டியல் புனரமைப்பு புனர்வாழ்வு அதிகார சபைக்கு ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு பச்சிலைப் பள்ளி (பளை) உதவி அரச அதிபர் பிரிவுகளில் இருந்து வந்து நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ளோருக்கு விசேட உலர் உணவு நிவாரணம் 2 ஆயிரம் ரூபா நிவாரணம் என்பன வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடமராட்சிக் கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறை, கரவெட்டிப் பகுதிகளில் உள்ள வெற்று வீடுகளில் தங்கியுள்ளோருக்கும் இதுவரை அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் எதுவும் கிடைக்கவில்லை என்று கூறப்படுகின்றது. குறிப்பாக உடனடித் தேவைகளான சமையல் பாத்திரங்கள், பாய்கள், சோப் வகைகள் என்பன இவர்களுக்கு வழங்கப்படவில்லை.

வடமராட்சி கிழக்கு, பச்சிலைப் பள்ளி ஆகிய பிரதேச செலயக பிரிவுகளிலிருந்து இடம்பெயர்ந்து கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ளோருக்கு விசேட உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை 1999 டிசெம்பரில் இடம்பெற்ற வெற்றிலைக்கேணி கட்டைக்காடு முகாம் தாக்குதல்களின் போது தாளையடி, மருதங்கேணி, உடுத்துறை ஆகிய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறை பிரதேச அலுவலர் பிரிவில் தங்கியுள்ள 47 குடும்பங்களுக்கு இதுவரை எந்தவிதமான நிவாரண உதவிகளும் வழங்கப்படவில்லை.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ள வடமராட்சி கிழக்கில் இருந்து இடம் பெயர்ந்துள்ள மக்கள் தமக்கு விசேட உலர் உணவு நிவாரணம் மற்றும் 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு என்பன இதுவரை வழங்கப்படாதது குறித்து மிகுந்த விசனத்தை தெரிவித்துள்ளார்கள்.

(இ-173)

# இரு வர்த்தகர்கள் வெள்ளியன்று கைது

யாழ்ப்பாணம்,மே.1

சங்கானையில் உள்ள கடை உரிமையாளர்கள் இருவர் கடந்த 28 ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்டதாக அவர்களது உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

கஜன் போட்டோ உரிமையாளரான குருமூர்த்தி சொரூபன் (சங்கானை ஆஸ்பத்திரி வீதி, வயது - 28), சலூன் உரிமையாளரான கந்தையா நவரத்தினம் (வட்டுக்கோட்டை, சங்கரத்தை வீதி, வயது - 48) ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

(இ-9)

# பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம்,மே.1

யாழ்.றோட்டறிக் கழகமும், யாழ் இந்துக் கல்லூரி இன்ரறக்ற் கழகமும் இணைந்து நடத்தும் "விடய ஆயத்தமும் வழங்கலும்" எனும் தலைப்பிலான பயிற்சிப்பட்டறையின் முதல் அமர்வு எதிர்வரும் 6ஆம், 7ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் மாலை 4.30 மணிவரை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

பேச்சாளராக விரும்புவோருக்கும், ஆசிரியர்களுக்கும் உகந்த இந்த நிகழ்வில் ஒரு பிரிவில் 30 பேர் கலந்து கொள்ளலாம்.

பங்குபற்ற விரும்புவோர் கஸ்தூரியார் வீதியில் உள்ள அருண்ஸ் விளையாட்டு மையத்தில் என்.சோமசுந்தரத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(இ-3-8)

# நாவாந்துறையில் கத்திக் குத்து

யாழ்ப்பாணம்,மே1

இரவு நித்திரையில் இருந்த வேளை கத்திக்குத்துக்கு இலக்காகி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நாவாந்துறையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் அந்த இடத்தைச் சேர்ந்த சூசை கந்தையா (வயது 48) என்ற எட்டுப்பிள்ளைகளின் தந்தையே படுகாயமடைந்தவராவர்.

படுகாயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அதி தீவிர சத்திரசிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

(இ-15)

# சிநேகபூர்வ ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,மே1

சயன்ஸ் அக்கடமி அணிக்கும் றூபா அக்கடமி அணிக்கும் இடையிலான சிநேகபூர்வமான மென்பந்து கிரிக்கெட், வலைப்பந்தாட்டங்கள் இன்று காலை 9.00 மணி முதல் ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (இ-3)

# நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம், மே.1

யாழ்.மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வீட்டு வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி போடும் நடவடிக்கை யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கடந்த 24ஆம் திகதி முதல் நாய்களுக்கு தடுப்பூசி போடும் வேலைகள் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இதன்படி நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை பின்வரும் நிலையங்களில் தடுப்பூசி போடப்படவுள்ளது.

★ நாளை செவ்வாய் காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணி வரையும் - றெக்கிளமேசன் சனசமூக நிலையம்.

பிற்பகல் 2 மணி தொடக்கம் 4.30 மணி வரையும் - மடத்தடி யூபிலி மகப்பேற்று நிலையம்.

★ புதன்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணி வரையும் - சோமசுந்தரம் அவெனியூ முன்பள்ளி.

பிற்பகல் 2 மணி தொடக்கம் 4.30 மணி வரையும் ஈச்சமோட்டை சனசமூகநிலையம்.

★ வியாழன் காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணிவரையும் - மகப்பேற்று நிலையம், சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.

பிற்பகல் 2 மணி தொடக்கம் 4.30 மணி வரையும் வேம்படி ஓ.எல்.ஆர் தேவாலயம் அருகில்.

★ வெள்ளி காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணிவரையும் - கொழும்புத்துறை சனசமூக நிலையம்.

★ பிற்பகல் 2 மணி தொடக்கம் 4.30 மணி வரையும் - மகப்பேற்று நிலையம், கண்டி வீதி, அரியாலை.

(இ-க-9-10)

# இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கு இந்தியா முழு ஆதரவு வழங்கும்

## இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

புதுடில்லி,மே1

இலங்கையின் ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பேணிக்காக்க இந்தியா அந்த நாட்டுக்கு முழு ஆதரவையும் வழங்கி உதவும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங் இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷமன் கதிர்காமருக்கு உறுதி அளித்துள்ளார்.

வைத்திய சிகிச்சைக்காகச் சென்று புதுடில்லியில் தங்கியுள்ள லக்ஷமன் கதிர்காமர் கடந்தவாரம் இந்திய வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்து இருநாட்டு உறவுகள் குறித்தும் பேசினார்.

அச்சமயமே இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்த உறுதிமொழியை வழங்கியதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

அதேசமயம் - இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸையும் கதிர்காமர் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

அடுத்த வாரம் அவர் இலங்கை திரும்புவதற்கு முன்னர் பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்துப் பேசவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-க-3)

# புங்குடுதீவில் மெய்வல்லுநர் போட்டி

வேலணைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர்ப் போட்டிகள் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு புங்குடுதீவு மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன.

வேலணைக் கல்விக் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் கோ. தில்லைநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தீவகவலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் வேலணை பிரதேச சபைத் தலைவர் எஸ்.கருணாகரகுருமூர்த்தி மற்றும் தீவகவலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ.ஒஸ்வேல்ட் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (இ-7)


# மரண அறிவித்தல்

## சபாபதிப்பிள்ளை அருளம்பலம்

(ஜெயக்குமார் பேக்கரி உரிமையாளர்)

பெரிய அரசடி, சாவகச்சேரியைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை அருளம்பலம் நேற்று (30-04-2000) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கனகம்மாவின் (இந்தியா) அன்புக் கணவரும் ஜெயக்குமார் (ஜேர்மனி), நிர்மலாதேவி, கோகிலாதேவி, சாந்தாதேவி, மகாநாமதேவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராசேந்திரம், பாலசுந்தரம் ஆகியோரின் அன்பு மாமனாரும் மதனி, கேதீஸ்வரன், ராஜ்குமார், மதனகுமார், விஜிதா, வதனா, வினோதினி, யசோதரன் றமேஷ்குமார், சுமித்தா ஆகியோரின் அன்புப் பேரனும் கஜானனின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பொற்தொழிலாளர் வீதி, சங்கத்தானையில் உள்ள அவரது மகளின் இல்லத்தில் இன்று (01-05-2000) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் கொற்புலவு மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ராஜ்குமார்
(பேரன்)

*பொற்தொழிலாளர் வீதி,*
*சங்கத்தானை.*

(C/12016)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01-05-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது